بسم الله الرحمن الرحيم      نحمده ونصلّی علی رسوله الکریم      وعلی عبده المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5
வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 3
ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது
துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

20 ஜமாதியுல் அவ்வல் 1441 ஹிஜ்ரி கமரி 16 ஃபதஹ் 1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
16 ஜனவரி 2020

## அல்லாஹ்வின் கட்டளை

وَمَا كَانَ لِنَبِيٍّ اَنْ يَّغُلَّ ؕ وَمَنْ يَّغْلُلْ يَاْتِ
بِمَا غَلَّ يَوْمَ الْقِيٰمَةِ ۚ ثُمَّ تُوَفّٰى كُلُّ نَفْسٍ
مَّا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُوْنَ

நம்பிக்கை துரோகம் செய்வதென்பது எத்தூதரின் உயர் தகுதிக்கும் ஏற்றதன்று. நம்பிக்கை துரோகம் செய்பவன் தனது நம்பிக்கைத் துரோகத்தால் பெற்றுக் கொண்டதை மறுமை நாளன்று தானே வெளிப்படுத்துவான். பின்னர் ஒவ்வோர் ஆன்மாவுக்கும் அது சம்பாதித்தது அதற்கு முழுமையாகக் கொடுக்கப்படும். அவர்களுக்கு எந்த அநீதியும் இழைக்கப்பட மாட்டாது. (3:162)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## திருக்குர்ஆனை பார்த்து வியப்பு ஏற்படுகிறது. இதே கல்லாதவர், வேதம் மற்றும் நுட்பத்தை மட்டும் கூறவில்லை. மாறாக ஆன்மா தூய்மையடைவதற்கான வழிகளையும் தெரிவித்திருக்கிறார்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### கல்லாத ரஸூல் (ஸல்) அவர்களின் ஈடில்லா அந்தஸ்து

நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் முழு உலக மக்களின் ஆன்மீக தர்பிய்யத்திற்காக வந்தார்கள், எனவே இந்த சிறப்பு, ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் மிக மேலான நிலையில் இருந்தது. மேலும் இந்த அந்தஸ்தை பற்றித்தான் திருக்குர்ஆன் பல இடங்களில் ஹுஸூர் அவர்கள் தொடர்பாக சான்றை வழங்குகிறது, மேலும் அல்லாஹ்வின் பண்புகளுக்கு நேர்எதிரில், அதே ரீதியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பண்புகளை எடுத்துக் கூறுகிறது. வமா அர்ஸல்னாக இல்லா ரஹ்மதல் லில் ஆலமீன். ( அல்அன்பியா : 108) மேலும் இதை போல , குல் யாஅய்யுஹன்னாசு இன்னீ ரஸூலுல்லாஹி இலைகும் ஜமீஆ (அல்)அஹ்ராஃப் :159) எனக் கூறுகிறது.

திருக்குர்ஆனின் மற்ற இடங்களை ஆழ்ந்து சிந்திப்பதால் தெரியவருவதாவது இறைவன் நபி (ஸல்) அவர்களை கல்லாதவர் எனக்கூறுவது , இறைவனை தவிர அன்னார் (ஸல்) அவர்களுக்கு வேறு ஆசிரியர் இருக்கவில்லை , இவ்வாறிருந்தும் அவர்கள் உம்மீ ஆக இருந்தார்கள். ஹுஸூர் அவர்களின் மார்க்கத்தில் உம்மீயூன் என்பது நடுத்தர மனிதர்கள் தவிர, உயர்தர தத்துவவாதிகள் மற்றும் அறிஞர்களுக்கும் கூறப்படும். இதிலிருந்து குல் யாஅய்யுஹன்னாசு இன்னீ ரஸூலுல்லாஹி இலைகும் ஜமீஆ என்பதின் அர்த்தத்தை மிகவும் நுட்பமான முறையில் புரிந்து கொள்ளமுடிகிறது. ஜமீஅ என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன, முதலாவது அனைத்து மனித இனம் அல்லது அனைத்து படைப்பினம். இரண்டாவது அனைத்து படித்தர மனிதர்களுக்காகவும் அதாவது நடுத்தரம், கீழ்தரம் மற்றும் உயர்தர தத்துவவாதிகள் மற்றும் அனைத்து வகை அறிவும் உள்ளவர்களுக்காக என்பதாகும். ஆகச்சுருக்கம், அனைத்து அறிவு மற்றும் அனைத்து தன்மையின் மனிதர் என்னுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

திருக்குர்ஆனை பார்த்து வியப்பு ஏற்படுகிறது இதே கல்லாதவர் வேதம் மற்றும் நுட்பத்தை மட்டும் கூறவில்லை மாறாக ஆன்மா தூய்மையடைவதற்கான வழிகளையும் தெரிவித்திருக்கிறார். மேலும் எதுவரை எனில் அய்யதஹூம் பிரூஹிம் மின்ஹு (அல்முஜாதலா ;23) வரை கொண்டு சென்றுள்ளார். பாருங்கள் மிக ஆழிய பார்வையில் பாருங்கள் திருக்குர்ஆன் எல்லாவித எதிர்பார்ப்பு உள்ளவர்களை அவர்களின் எதிர்பார்ப்பு வரை கொண்டு சேர்க்கிறது, மேலும் அனைத்து நேர்மை மற்றும் உண்மையின் தாகம் உடையவர்களின் தாகத்தை தனிக்கிறது. ஆனால் இந்த நுட்பம் மற்றும் ஞானம் என்ற நதி, உண்மை மற்றும் ஒளியின் ஊற்று யார் மீது இறங்கியது ? என்று சிந்தனைதான் செய்யுங்களேன், உலக வரலாற்றில் அவருக்கு ஈடு இல்லாத, அதே முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறங்கியது, அவர் ஒருபுறம் உம்மீ எனக்கூறப்படுகிறார், மறுபுறம் அந்த சிறப்புகள் மற்றும் ஆழிய கருத்துக்கள் அவரின் வாயிலிருந்து வெளிவருகிறது. இறைவனின் தொடர்புகள் மனிதனுடன் எங்குவரை ஏற்படும் ? என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள, இது இறைவனின் மிகமேலான அருள் ஆகும். இதனை கூறுவதில் நமது நோக்கம், இறைவனின் தொடர்புகள் மிக நுண்ணிய இடம் வரை சென்றுவிடுகிறது என்பதற்காகவே ஆகும். படைப்பினங்களை வணங்குபவர்கள் அவர்களை இறைவனாக நினைத்து விடுமளவிற்கு, இறைவனின் தொடர்பு நெருக்கமானவர்களோடு ஏற்பட்டுவிடுகிறது. இது முற்றிலும் சரியானதும் மேலும் உண்மையானதும் ஆகும்.

இறைவன் அவர்களுடன் எவ்வாறிருக்கிறான் எனில் துஆ இல்லாமல் அவர்களுக்கு உதவி செய்கிறான். நான் எதனை விவரித்து ஆரம்பம் செய்துள்ளேன் எனில், அது மனிதனின் உயரிய படித்தரம் அமைதிக்குரிய ஆன்மா என்பதாகும் அதுவே குறிக்கோள் ஆகும். இதே நிலையில், எல்லா நிலைகளிலிருந்த பொதுவான இறை தொடர்பு அதிகரித்து சிறப்பான தொடர்பாக மாறிவிடுவது கட்டாயமாகிவிடுகிறது. அது பூமி மற்றும் மேற்பரப்பில் உள்ளதல்ல மாறாக அறிவு மற்றும் வானத்தின் தொடர்பாகும். இதன் அர்த்தம், இது நிம்மதி ஆகும், இதனை வெற்றி மற்றும் நிலைநிற்பது என்றும் கூறுவார்கள். மேலும் இஃதினஸ் சிராதல் முஸ்தகீம் (1:6) என்பதிலும் இதுவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இதே வழியின் துஆ போதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிலைநிற்றலின் வழி முன்அம் அலைஹிம் என்ற மக்களின் வழி ஆகும். இறைவனின் அருள்கள் மற்றும் கண்ணியத்தை பெற்றவர்களாவர். முன்அம் அலைஹிம் என்ற வழியை குறிப்பாக எடுத்துக்கூறுவதன் அர்த்தம் இதுவாகும், நிலைநிற்பதின் வழிகள் பல உள்ளன, ஆயினும் அந்த நிலைநிற்றல் என்பது தேர்ச்சி மற்றும் வெற்றியின் வழிகள் ஆகும். அவை நபிமார்களின் (அலை) வழிகள் ஆகும். இதில் மற்றுமோர் விசயமும் தெரியவருகிறது, இஃதினஸ் சிராதல் முஸ்தகீம் என்பதில் துஆ, மனித நாவு , உள்ளம் மற்றும் செயலால் நிகழ்கிறது, மேலும் மனிதன் இறைவனிடம் நல்லவர் ஆக துஆ செய்யும் போது அவனுக்கு வெட்கம் வருகிறது, ஆயினும் இந்த ஒரு துஆவே அவனின் கஷ்டங்களை அகற்றுகிறது. இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தயீன் (1:5). உன்னையே வணங்குகிறோம் மேலும் உன்னிடமே உதவிகளை கேட்கிறோம்

(மல்ஃபூஸாத், தொகுதி 1 பக்கம் 104–106 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற சஹாபாக்களான ஹஸ்ரத் யஸீத் பின் சாபித் (ரலி), ஹஸ்ரத் மவூஸ் பின் அம்ர் பின் ஜமூஹ் (ரலி), ஹஸ்ரத் பிஷர் பின் பரா (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்தவர்களுக்கு வழங்கிய கண்ணியம்**

**ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ் (ரலி) அவர்கள் ஊனமுற்றவர்களாக இருந்தும்கூட போரில் கலந்து கொள்ள வேண்டும் என்று அவர்களிடம் காணப்பட்ட உணர்வு மற்றும் அன்னார் ஷஹீதானது தொடர்பான நற்குறிப்பு**

**ஒரு யூதப் பெண் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு விஷம் கலந்த மாமிசத்தை கொடுத்தது மற்றும் அதற்குப் பிறகும் ஒரு பெருமானார் (ஸல்) அவர்கள் ஆரோக்கியமான வாழ்க்கையை கழித்ததும் தொடர்பான நற்குறிப்பு**

**மதிப்பிற்குரிய அலி முஹம்மது சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய நஸீர் அஹ்மது சாஹிப் மற்றும் மியான் அல்லாஹ் தத்தா சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய அதாவுல் கரீம் முபஷ்ஷிர் சாஹிப் அவர்களின் வஃபாத் பற்றிய அறிவிப்பு மற்றும் அவர்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு ஹுஸூர் அவர்கள் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 29 நவம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **29 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் யஸீத் பின் சாபித் (ரலி) அவர்கள் பத்ர் போரில் கலந்து கொண்ட ஒரு சஹாபி ஆவார்கள். அன்னார் அன்ஸார் கோத்திரத்தின் கஸ்ரஜ் குடும்பத்தின் பனூ மாலிக் பின் நஜ்ஜாரைச் சார்ந்தவர் ஆவார்கள். அன்னாரின் தந்தையின் பெயர் சாபித் பின் ஸஹ்ஹாக் ஆகும். தாயாரின் பெயர் நவா பின்த் மாலிக் ஆகும். ஹஸ்ரத் யஸீத் அவர்கள், ஸைது பின் சாபித் அவர்களின் மூத்த சகோதரர் ஆவார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 137 'ஸைது பின் சாபித்' – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 677 'யஸீத் பின் சாபித்' – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரது திருமணம் துபையா பின்த் சாபித் அவர்களுடன் நடைபெற்றது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 254 'சாபித் பின் காலித்' – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் பத்ர், உஹது ஆகிய இரண்டு போர்களிலும் கலந்து கொண்டதாக வருகிறது. அன்னாரது ஷஹாதத் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் யமாமா போரின் நாளில் நிகழ்ந்தது.

இன்னொரு அறிவிப்பிற்கேற்ப, யமாமா போரின்போது அன்னார் மீது ஓர் அம்பு பட்டது. அதிலிருந்து திரும்பி வரும்போது அன்னாரது மரணம் நிகழ்ந்தது என்றும் வந்துள்ளது.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 4 பக்கம் 132 'யஸீத் பின் சாபித்' – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் யஸீத் பின் சாபித் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தார்கள். அப்போது ஒரு ஜனாஸா கொண்டு செல்லப்பட்டது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்தவர்களும் எழுந்து நின்றார்கள். எதுவரை நின்று கொண்டிருந்தார்கள் என்றால் அந்த ஜனாஸா அவர்களை விட்டு கடந்து சென்றது.

(சுனன் நிஸாயி கிதாபுல் ஜனாயிஸ் பாப் அரபி ஹதீஸ் எண் 1920)

இதே சம்பவம் இன்னொரு அறிவிப்பில் மிக விளக்கமாக வந்துள்ளது. ஹஸ்ரத் யஸீத் பின் சாபித் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களுடன் அமர்ந்திருந்தார்கள். ஒரு ஜனாஸா கொண்டு செல்லப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனைப் பார்த்தபோது உடனடியாக எழுந்து நின்றார்கள். அவ்வாறே அன்னாரது சஹாபாக்களும் விரைவாக எழுந்து நின்றார்கள். எப்போது வரை ஜனாஸா கடந்து செல்லவில்லையோ அப்போது வரை நின்று கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் யஸீத் அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் ஏதாவதொரு கஷ்டத்தினாலோ அல்லது இடம் இல்லாததினாலோ எழுந்து நின்றார்கள் என்று நான் கருதவில்லை. மாறாக, ஒரு யூத ஆண் அல்லது பெண்ணின் ஜனாஸாவாக இருந்தது. நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எழுந்து நின்றதற்கான காரணத்தையும் கேட்கவில்லை.

(அல்முன்ஸிஃப் லாபின் அபீ ஷைபா தொகுதி 3 பக்கம் 732 கிதாபுல் ஜனாயிஸ் பாப் اَلْأَمْرِ بِالْقِيَامِ لِلْجَنَازَةِ ஹதீஸ் எண் 12030 – லாஹூரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் யஸீத் பின் சாபித் அவர்களிடமிருந்து இன்னொரு அறிவிப்பும் உள்ளது. ஒரு நாள் அந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வெளியேறினார்கள்.

இதில் ஒன்று நிஸாயில் இடம் பெற்றுள்ளது. இன்னொரு அறிவிப்பு வரலாற்று நூலில் இடம் பெற்றுள்ளது.

இது இன்னொரு அறிவிப்பாகும். அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வெளியேறியபோது அன்னார் ஒரு புதிய கபரை பார்த்து இது என்ன என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், இது இந்த கோத்திரத்தைச் சார்ந்த பெண்ணின் கபர் ஆகும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை அடையாளங்கண்டு கொண்டார்கள். எனவே சஹாபாக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அவள் மதிய வேளையில் மரணமடைந்தாள். தாங்கள் அப்போது ஓய்வெடுத்துக் கொண்டிருந்தீர்கள். எனவே அந்த நேரத்தில்

நாங்கள் உங்களை எழுப்ப விரும்பவில்லை என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் தமக்குப் பின்னால் சஃப்களை அமைத்தார்கள். மேலும் நான்கு தக்பீர் கூறினார்கள். அதாவது சஃப்பை அமைத்து நான்கு தக்பீர் கூறி ஜனாஸா தொழ வைத்தார்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள்: நான் உங்கள் மத்தியில் இருக்கின்ற வரை உங்களில் எவர் மரணமடைந்தாலும் அதைப் பற்றிய தகவலை எனக்கு கண்டிப்பாக வழங்குங்கள். ஏனென்றால் நான் செய்கின்ற துஆ அவருக்கு ரஹ்மத்தாகும்.

(சுனன் நிஸாயி கிதாபுல் ஜனாயிஸ் பாப் مَنْ قَالَ يُقَامُ لِلْجِنَازَةِ إِذَا مَرَّتْ ஹதீஸ் எண் 2022)

இதேபோன்று சுனன் அபூதாவூது, இப்னு மாஜாவிலும் இந்த அறிவிப்பு விரிவாக வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் யஸீது பின் சாபித் அவர்கள் கூறினார்கள்: அதாவது அவர்கள் ஸைது அவர்களை விட மூத்தவர் ஆவார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வெளியேறினோம். அன்னார் ஜன்னத்துல் பகீயை அடைந்ததும் அங்கு ஒரு புதிய கபர் ஒன்று இருந்தது. அதைப் பற்றி அன்னார் கேட்டறிந்தார்கள். அதற்கு அன்னாரிடம், இது இந்த நபரது கபர் ஆகும் என்று கூறப்பட்டது.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை அடையாளங்கண்டு கொண்டார்கள். மேலும், இது தொடர்பாக எனக்கு ஏன் தகவல் தெரிவிக்கவில்லை என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், தாங்கள் மதிய வேளையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தீர்கள். தாங்கள் நோன்பும் வைத்திருந்தீர்கள். எனவே உங்களுக்கு கஷ்டத்தை கொடுக்க நாங்கள் விரும்பவில்லை என்று கூறினர்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்குத் தெரியாத இத்தகைய செயலை செய்யாதீர்கள். அதாவது நான் ஒருபோதும் இவ்வாறு கூறவில்லையே? உங்களில் எவர் ஒருவர் மரணமடைந்தாலும் எப்போது வரை நான் உங்கள் மத்தியில் இருப்பேனோ என்னிடம் அது பற்றி கண்டிப்பாக தகவல் கொடுக்க வேண்டும். ஏனென்றால் எனது துஆவானது அவருக்கு ரஹ்மத்தாக அமையும். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த கபருக்கு சென்றார்கள். நாங்கள் அன்னாருக்குப் பின்னால் சஃப்பை அமைத்தோம். பிறகு அன்னார் நான்கு தக்பீர்களை கூறினார்கள்.

(சுனன் இப்னு மாஜா கிதாபுல் ஜனாயிஸ் பாப் مَا جَاءَ فِي الصَّلَاةِ عَلَى الْقَبْرِ ஹதீஸ் எண் 1528)

அபூ ஹுரைரா அவர்கள் அறிவித்த ஓர் அறிவிப்பு சஹீஹ் புகாரியில் உள்ளது. அதாவது ஒரு கருப்பு நிற பெண்மணியின் கப்ரில் ஜனாஸா தொழ வைப்பது தொடர்பான அறிவிப்பு இடம் பெற்றுள்ளது. அதாவது அந்த பெண் மஸ்ஜிது நபவியை சுத்தம் செய்யும் பணியில் செய்து வந்தாள். அவள் மரணித்து விட்டாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த பெண்ணை சிறிது நாட்களாக பார்க்கவில்லை. எனவே அந்தப் பெண் தொடர்பாக கேட்டறிந்தார்கள். அதற்கு மக்கள், அவள் மரணித்து விட்டாள் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனக்கு ஏன் இதைப் பற்றிய தகவலை தெரிவிக்கவில்லை என்று கூறினார்கள். பிறகு அந்தப் பெண்ணின் கபரைப் பற்றி கேட்டறிந்தார்கள். பிறகு அந்தப் பெண்ணின் கபருக்குச் சென்று ஜனாஸா தொழ வைத்தார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுஸ் ஸலாத்... ஹதீஸ் எண் 460)

சுனன் இப்னு மாஜாவின் விளக்கவுரையான அன்ஜாஹுல் ஹாஜாவின் ஆசிரியர் எழுதுகின்றார்: ஒரு கருப்பு நிற பெண் இருந்தாள். அவளின் பெயர் உம்மே மஹ்ஜன் என்று உம்மே பைஹக்கி கூறுகின்றார்.

மேலும் இப்னு மன்தா அவர்கள் அந்த பெண்ணின் பெயரை ஹர்கா என்று குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் அவர்கள் பெண் சஹாபி ஆவார்கள். ஆக ஹர்கா என்பது அந்தப் பெண்ணின் அசல் பெயராகவும், உம்மே மஹ்ஜன் சுட்டுப் பெயராகவும் இருக்கலாம். அதாவது இரண்டு பெயர்களும் சரிதான்.

(சுனன் இப்னு மாஜாவின் விளக்கவுரையான அன்ஜாஹுல் ஹாஜா என்ற நூல் தொகுதி 4 பக்கம் 332, கிதாபுல் ஜனாயிஸ், பாப் மாஜாஅ ஃபிஸ் ஸலாத்தி அலல் கபர், ஹதீஸ் எண் 1527 – 2011 ஆம் ஆண்டு இஸ்லாமாபாதிலுள்ள தாருன் நூரில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஹஸ்ரத் மவூஸ் பின் அம்ர் பின் ஜமூஃ என்ற சஹாபியைப் பற்றி எடுத்துக் கூறப்படும். அன்னார் அன்ஸார் கோத்திரத்தின் கஸ்ரஜ் குடும்பத்தின் பனூ ஹுஷைமைச் சார்ந்தவர்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 470... – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரது தந்தையின் பெயர் அம்ர் பின் ஜமூஃ ஆகும். தாயாரின் பெயர் ஹிந்து பின்த் அம்ர் ஆகும். அன்னார் ஹஸ்ரத் மஆஸ் மற்றும் ஹஸ்ரத் கல்லாத் ஆகிய தமது இரண்டு சகோதரர்களுடன் இணைந்து பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். அதுமட்டுமின்றி உஹது போரிலும் கலந்து கொண்டார்கள்

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 426,427 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மவூஸ் பின் அம்ர் அவர்களின் தந்தையான அம்ர் பின் ஜமூஃ அவர்களைதான் அவர்களது மகன்கள் அன்னார் கால் ஊனமுற்றவராக இருந்ததினால் பத்ர் போரில் கலந்து கொள்ள விடவில்லை.

இதைப் பற்றி நான் இதற்கு முன்பும் ஒரு முறை குத்பாவில் எடுத்துக் கூறியுள்ளேன். சுருக்கமாக இப்போது எடுத்துக் கூறுகின்றேன். உஹது போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஃ அவர்கள் தமது மகன்களிடம், பத்ர் போர் சந்தர்ப்பத்தில் நீங்கள் என்னை செல்ல விடவில்லை. ஆனால் இப்போது நான் உஹது போரில் கண்டிப்பாக கலந்து கொள்வேன். உங்களால் என்னை தடுக்க முடியாது என்று கூறினார்கள்.

அன்னாரது மகன்கள், உங்களது கால் சரியாக இல்லை. எனவே உங்கள் மீது போர் செய்வது கடமையல்ல என்று கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஃ அவர்கள், அவர்களது பேச்சைக் கேட்காமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, யா ரஸூலல்லாஹ்! எனது மகன்கள் எனது கால்களின் பிரச்சனையின் காரணமாக போரில் கலந்து கொள்வதிலிருந்து என்னைத் தடுக்கின்றார்கள். ஆனால் நான் உங்களுடன் போரில் கலந்து கொள்ள விரும்புகின்றேன் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உங்களைப் பொறுத்தவரை உங்களை அல்லாஹ் பலவீனராக ஆக்கியுள்ளான். இதன் காரணமாக ஜிஹாத் உங்கள் மீது கடமையல்ல என்று கூறினார்கள். ஆனால் இவர்களிடம் காணப்பட்ட ஆர்வம் மற்றும் துடிப்பு ஆகியவற்றைப் பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரக ஆழத்தின் அடிமட்டத்தில் இருப்பர். அவர்களுக்கு உதவி செய்பவராக (எவரையும்) நீர் ஒருபோதும் காண மாட்டீர். (4:146)

A.Basheer Ahmad, Melapalayam

அவர்கள், போரில் கலந்து கொள்வதற்கான அனுமதியை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஃ அவர்கள் போருக்கான தனது பொருட்களை எடுத்துக் கொண்டு, அல்லாஹ்வே! எனக்கு ஷஹாதத்தை வழங்குவாயாக. என்னை தோல்வியுற்றவனாக எனது குடும்பத்தினரிடம் திருப்பி அனுப்பிவிடாதிருப்பாயாக என்று துஆ செய்தவாறு வெளியேறினார்கள். பிறகு உண்மையில் அன்னாரது இந்த விருப்பம் நிறைவேறியது. மேலும் அவர்கள் உஹது மைதானத்தில் ஷஹீது ஆனார்கள்.

அன்னாரது ஷஹாதத்திற்குப் பிறகு அவர்களது மனைவி ஹஸ்ரத் ஹிந்த் அவர்கள், அவர்களையும், அவர்களது சகோதரரான அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்களையும் ஒரே பயண வாகனத்தில் அமர்த்தினார்கள். மேலும் இருவரும் ஒரே கபரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது உயிர் எந்த இருப்பின் கையில் இருக்கின்றதோ அந்த இருப்பின் மீது ஆணையாக! நான் சுவர்க்கத்தில் ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஃ அவர்கள் தமது ஊனமுற்ற கால்களுடன் நடந்து செல்வதைக் கண்டேன்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 195,196 அம்ர் பின் ஜமூஹ் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் பிஷ்ர் பின் பரா பின் மஃரூர் ஆவார்கள். அன்னார் அன்ஸார் கோத்திரத்தின் கஸ்ரஜ் குடும்பத்தின் பனூ உபைது பின் அதீயைச் சார்ந்தவர் ஆவார்கள். இன்னொரு கூற்றிற்கேற்ப, அன்னார் பனூ சலமாவைச் சார்ந்தவர் ஆவார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 471 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா லாபின் அஸீர் தொகுதி 1 பக்கம் 380 பிஷ்ர் பின் பரா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இரண்டு வெவ்வேறு அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன.

அன்னாரின் தந்தையின் பெயர் ஹஸ்ரத் பரா பின் மஃரூர் ஆகும். தாயாரின் பெயர் குலைதா பின் கைஸ் ஆகும்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 291 பிஷ்ர் பின் பரா – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரது தந்தையான பரா பின் மஃரூர் அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்ட 12 கண்காணிப்பாளர்களில் ஒருவர் ஆவார்கள். அன்னார் பனூ சலமாவின் உளவாளி ஆவார்கள். ஹஸ்ரத் பரா அவர்கள், ஹிஜ்ரத் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக பயணம் செய்து கொண்டிருந்தபோது மரணமடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்ததும் அவர்களது கபருக்கு சென்று நான்கு தக்பீர்களை கூறினார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா லாபின் அஸீர் தொகுதி 1 பக்கம் 365,366 பிரா பின் மஃரூர் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் பிஷ்ர் அவர்கள் தனது தந்தையுடன் இரண்டாவது பைஅத்தே அக்பாவில் கலந்து கொண்டார்கள். மேலும் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அம்பு எய்யும் சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிஷ்ர் அவர்களுக்கும், மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து வந்த ஹஸ்ரத் வாகிது பின் அப்துல்லாஹ் அவர்களுக்கும் இடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் பிஷ்ர் அவர்கள் பத்ர், உஹது, அகழ், ஹுதைபிய்யா மற்றும் கைபர் போன்ற சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டிருந்தார்கள்.

(அல்அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 1 பக்கம் 426 பிஷ்ர் பின் பரா – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 291 பிஷ்ர் பின் பரா – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அப்துர் ரஹ்மான் பின் அப்துல்லாஹ் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பனூ நஸ்லாவே! வேறு சில அறிவிப்புகளில் பனூ சலமா என்றும் வந்துள்ளது. உங்களது தலைவர் யார்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் ஜத் பின் கைஸ் ஆவார் என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், எந்த காரணத்திற்காக அவரை தலைவராக ஏற்றுக் கொள்கின்றீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், அவர் எங்களில் மிகப்பெரும் செல்வம் படைத்தவர் ஆவார். பணக்காரர் ஆவார். மிகப்பெரிய மனிதர் ஆவார். எனவே அவரை நாங்கள் எங்கள் தலைவராக ஆக்கிக் கொண்டோம். ஆனால் அவர் மிகவும் கருமித்தனம் கொண்டவராக இருக்கின்றார்கள். இவரது இந்த செயல் எங்களுக்கு பிடித்தமானதாக இல்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கருமித்தனத்தை விட மிகப்பெரிய நோய் வேறு என்னதான் இருக்கிறது? கஞ்சனாக இருப்பது மிகப்பெரிய நோய் ஆகும். எனவே அவர் உங்களது தலைவராக இருக்க முடியாது.

அதற்கு அவர்கள், பிறகு எங்களது தலைவர் யார்? தாங்களே கூறுங்கள் என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பிஷ்ர் பின் பரா பின் மஃரூர் உங்களது தலைவர் ஆவார்கள்.

அதாவது எந்த சஹாபியைப் பற்றி எடுத்துக் கூறப்பட்டு வருகிறதோ அவர் தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவரே உங்களது தலைவர் ஆவார்.

இன்னொரு அறிவிப்பில் இந்த சொற்கள் வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களது தலைவர் வெள்ளை நிறத்தையுடைய, மெல்லிய முடியை உடைய பிஷ்ர் பின் பரா பின் மஃரூர் ஆவார்.

(அல்அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 1 பக்கம் 426,427 பிஷ்ர் பின் பரா – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 291 பிஷ்ர் பின் பரா – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் கபீஸா பின்த் ஸைஃபா அவர்களை ஹஸ்ரத் பிஷ்ர் அவர்கள் திருமணம் செய்தார்கள். அவர்களுக்கு ஆலியா என்ற ஒரு மகள் பிறந்தாள். ஹஸ்ரத் கபீஸா இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பைஅத்தும் செய்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 435 – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன்பு யூதர்கள் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தினருக்கிடையே ஏற்படுகின்ற சண்டையின்போது அன்னாரின் பெயரின் மூலமாக தமக்கு வெற்றி

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

கிடைக்க வேண்டும் என்று வேண்டி வந்தனர். ஒருவர் மற்றவருக்கு எதிராக சண்டையிடும்போது இந்த துஆவை செய்து வந்தனர். எவரைப் பற்றிய முன்னறிவிப்பு உள்ளதோ மேலும் எவர் வர விருக்கின்றாரோ அவரின் பெயரால் எங்களுக்கு வெற்றியை வழங்குவாயாக என்று அல்லாஹ்விடம் துஆ செய்து வந்தார்கள்.

ஆனால் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அரபு நாட்டிலிருந்தே தோன்றச் செய்தபோது அந்த மக்களே நிராகரித்தனர். மேலும் எந்த விஷயத்தை அவர்கள் கூறி வந்தார்களோ அதை மறுத்தனர். இந்த வழிமுறையைத்தான் மறுக்கக்கூடியவர்கள் எப்போதும் கையாளுகின்றனர்.

ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் மற்றும் ஹஸ்ரத் பிஷ்ர் பின் பரா மற்றும் தாவூது பின் சலமா ஆகியோர் அவர்களிடம், யூதர்களின் கூட்டத்தினரே! அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள். மேலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் எங்கள் மீது வரவிருக்கின்ற முஹம்மது என்ற நபியின் பெயரால் வெற்றியை வேண்டி வந்தீர்கள். அதாவது முஹம்மது என்ற பெயருடைய ஒரு நபி தோன்றுவார். அவரின் பெயரைக் கொண்டு வெற்றிக்காக துஆ செய்து வந்தீர்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் பிஷ்ர் பின் பரா அவர்கள் கூறினார்கள்: நாங்கள் இணை வைப்பவர்களைச் சார்ந்தவர்களாக இருந்தோம். அதற்கு நீங்கள் எங்களிடம், அந்த நபி தோன்றக் கூடிய நேரம் வந்து விட்டது. அவர் தோன்றுவார். மேலும் அவரது வருகை தொடர்பான அடையாளங்களை எங்களுக்கு எடுத்துக் கூறி வந்தீர்கள். ஆனால் அவர் இப்போது வந்து விட்டார். எனவே இந்த நபியின் மீது ஏன் ஈமான் கொள்ளவில்லை என்று கேட்டார்கள்.

அப்போது ஒரு யூதனான பனூ நஸீர் கோத்திரத்தின் தலைவனான சலாம் பின் மஷ்கம் என்பவன் இவ்வாறு பதில் அளித்தான். இவன், அந்த கோத்திரத்தின் கரூவூலங்களின் கண்காணிப்பாளனாகவும் இருந்தான். மேலும் ஸைனப் பின்த் ஹாரிஸ் என்ற பெண்மணியின் கணவன் ஆவான். இந்தப் பெண்தான் கைபர் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மாமிசத்தில் விஷயத்தை கலந்து கொடுத்தாள்.

எவ்வாறிருப்பினும் அவன் கூறினான்: நாங்கள் அடையாளங்கண்டு கொள்கின்றவற்றை அந்த நபி எங்களிடத்தில் கொண்டு வரவில்லை. மேலும் நாங்கள் உங்களிடம் எடுத்துக் கூறிய அந்த நபி இவர் அல்ல. மேலும் அனைத்து அடையாளங்களும் பூர்த்தியாகவில்லை. எனவே நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று கூறினான்.

அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை அருளினான்.

وَلَمَّا جَآءَهُمْ كِتٰبٌ مِّنْ عِنْدِ اللّٰهِ مُصَدِّقٌ لِّمَا مَعَهُمْ ۙ
وَكَانُوْا مِنْ قَبْلُ يَسْتَفْتِحُوْنَ عَلَى الَّذِيْنَ كَفَرُوْا ۚ فَلَمَّا
جَآءَهُمْ مَّا عَرَفُوْا كَفَرُوْا بِهٖ ۡ فَلَعْنَةُ اللّٰهِ عَلَى الْكٰفِرِيْنَ

அதாவது, அவர்களிடமுள்ளதை (முன்னறிவிப்புகளை) உண்மைப்படுத்தக்கூடிய ஒரு வேதம் அல்லாஹ்விடமிருந்து அவர்களிடம் வந்தபோது, இதற்கு முன்னர் நிராகரிப்பவர்களின் மீது வெற்றியை வேண்டுபவர்களாய் அவர்கள் இருந்தும், ஏற்கனவே (முன்னறிவிப்புகளை உண்மை என) அவர்களுக்குத் தெரிந்தவை அவர்களிடம் வந்தபோது அதனை நிராகரித்து விட்டனர். எனவே அத்தகு நிராகரிப்பாளர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டு. (2:90)

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 381 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜுபைர் பின் அவாம் அவர்கள் கூறுகின்றார்கள்: உஹது போரின் நிலைமை மாறியபோது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எனக்கு அருகில் கண்டேன். அப்போது அனைவரும் அச்சத்திற்குரிய நிலையில் இருந்தனர். மேலும் எங்கள் மீதும் தூக்கத்திற்குரிய நிலை ஏற்பட்டது. எத்தகைய நிலை என்றால், ஒரு மயக்கத்திற்குரிய நிலையைப் போன்று அது இருந்தது. தூக்கம் மற்றும் மயக்கத்தின் நிலையின் காரணமாக எங்களது தலைகள் கீழே சாய்ந்திருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! மஃதா பின் கஷீரின் ஓசை கனவில் கேட்பதைப் போல் இருந்தது. மேலும் அவர்கள், எங்களுக்கு முடிவெடுப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் நாங்கள் ஒருபோதும் இவ்வாறு கொலை செய்யப்பட்டிருக்க மாட்டோம் என்று கூறினார்கள். இவர் ஒரு அன்ஸாரி சஹாபி ஆவார். மேலும் பைஅத்தே உக்பாவிலும், பத்ர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொண்டுள்ளார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கனவில் கண்ட அன்னாரது கூற்றை அப்படியே மனனம் செய்தேன். அப்போது அந்த சந்தர்ப்பத்தில் அல்லாஹ் இந்த வசனத்தை அருளினான்.

ثُمَّ اَنْزَلَ عَلَيْكُمْ مِّنْ بَعْدِ الْغَمِّ اَمَنَةً نُّعَاسًا يَّغْشٰى
طَآئِفَةً مِّنْكُمْ ۙ وَطَآئِفَةٌ قَدْ اَهَمَّتْهُمْ اَنْفُسُهُمْ
يَظُنُّوْنَ بِاللّٰهِ غَيْرَ الْحَقِّ ظَنَّ الْجَاهِلِيَّةِ ۖ يَقُوْلُوْنَ هَلْ لَّنَا
مِنَ الْاَمْرِ مِنْ شَيْءٍ ۗ قُلْ اِنَّ الْاَمْرَ كُلَّهٗ لِلّٰهِ ۗ

பிறகு அவன் இத்துக்கத்திற்குப் பின், உங்களுக்கு மன அமைதியை அதாவது தூக்கத்தை இறக்கினான். இது உங்களுள் ஒரு பிரிவினரை ஆட்கொண்டது. மற்றொரு பிரிவினர் தம்மைப் பற்றிய கவலையில் ஆழ்ந்திருந்தனர். இவர்கள் அல்லாஹ்வைக் குறித்து அறிவீனமான யூகம் போன்று, உண்மையற்ற எண்ணங் கொண்டிருந்தனர். இவ்விஷயத்தில் எங்களுக்கும் ஏதேனும் கூறுவதற்கு உண்டா எனக் கூறி வந்தனர். தீர்மானங்கள் எல்லாம் அல்லாஹ்விற்குரியது என்று நீர் கூறுவீராக. (3:155)

ஹஸ்ரத் கஅப் பின் அம்ர் அன்ஸாரி அவர்கள் கூறுகின்றார்கள்: உஹது போரின்போது ஒரு சந்தர்ப்பத்தில் நான் எனது சமுதாயத்தைச் சார்ந்த 14 நபர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். எங்களுக்கு ஒரு விதமான மயக்க நிலை ஏற்பட்டது. அது மிகவும் நிம்மதியான தருணமாக இருந்தது. போரின் நிலையிலும் அவர்களுக்கு மயக்கத்திற்குரிய நிலை ஏற்பட்டது. அந்த மயக்க நிலையும் கூட, நிம்மதியை தரக்கூடியதாக இருந்தது. குரட்டை சப்தத்தை வெளிப்படுத்தாத எந்த நபரும் இருக்கவில்லை. சில நேரங்களில் எந்த அளவுக்கு ஆழமான மயக்க நிலை இருந்தது என்றால், நான் பிஷ்ர் பின் பரா அவர்களைப் பார்த்தேன். அவர்களது கைகளிலிருந்து வாள் நழுவி கீழே விழுந்து விட்டது. இருப்பினும் வாள் கீழே விழுந்ததற்கான எந்த உணர்வும் அவர்களிடம் இல்லாமல் இருந்தது.

(அஸீரத்துன் நபவிய்யா தொகுதி 2 பக்கம் 310 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

## திருக்குர்ஆனிலிருந்து...

நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்ற நினைக்கின்றனர். ஆனால் அவன் அவர்களுடைய ஏமாற்றுதலுக்கு தண்டனை அளிப்பான். அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது சோம்பி நிற்கின்றனர். அவர்கள் மக்களுக்குக் காட்டு(வதற்காக தொழு)கின்றனர். மேலும் அல்லாஹ்வைக் குறைவாகவே நினைவு கூருகின்றனர். (4:143)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

எவ்வாறிருப்பினும் இங்கு நஆஸ் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான விளக்கத்தை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மிகவும் விரிவாக வழங்கியுள்ளார்கள். இதற்கு பல பொருட்கள் உள்ளன. எவ்வாறிருப்பினும் சுருக்கமாக இதன் பொருள் இவ்வாறு அமையும். அதாவது துக்கத்திற்குப் பிறகு உங்களுக்கு எப்படிப்பட்ட அமைதி ஏற்படும் என்றால் அதை தூக்கும் என்றும் கூறலாம். அல்லது எத்தகைய மயக்க நிலை இருக்கும் என்றால் அது அமைதி நிறைந்ததாக இருக்கும். அல்லது எத்தகைய அமைதியின் நிலை ஏற்படும் என்றால் அது தூக்கத்திற்கான தாக்கத்தை தன்னகத்தே கொண்டிருக்கும். இந்த சொல்லிற்கு இதுதான் பொருள் ஆகும்.

மயக்கம் என்பது தற்காலிகமாக தலை கீழே விழக்கூடியவற்றிற்கும் சொல்லப்படும். ஆனால் இங்கு நஆஸ் என்பது எத்தகைய நிலையை குறிக்கும் என்றால் அது தூக்கம் மற்றும் விழித்திருத்தல் ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையையே குறிக்கும். தூங்குவதற்கு முன்பு எத்தகைய ஒரு சந்தர்ப்பம் வருகின்றது என்றால் அப்போது அனைத்து உடல் உறுப்புகளுக்கும் ஒரு நிம்மதி கிடைக்கிறது. மேலும் அந்த நிம்மதியின் நிலை தொடர்ந்தால் அதுவே தூக்கமாக மாறி விடுகிறது. இந்த நிலையில் மனிதன் நடந்து சென்றால் அவன் விழ நேரிட்டால் அவன் விழ மாட்டான். மாறாக அவனுக்கு தடுமாற்றம் ஏற்படுகிறது. அதன் காரணமாக நான் எந்த நிலையில் இருந்தேன் என்பதை அவன் உணர்ந்து கொள்வான். ஆனால் தூக்கம் வந்து விட்டால் பிறகு தனது உறுப்புகளின் மீது அவனுக்கு எந்த அதிகாரமும் இருப்பதில்லை.

எவ்வாறிருப்பினும் பிஷர் அவர்களுக்கு அந்த நிலையில் இத்தகைய தூக்கமே வந்திருக்கலாம். ஆனால் போருக்கான சூழ்நிலை இருந்தபோதிலும் அவர்களுக்கு அந்த அமைதியின் நிலை ஏற்பட்டது. எனவேதான் அவர்களது கைகளிலிருந்து வாள் விழுந்து விட்டது. எவ்வாறிருப்பினும் இது எத்தகைய நிலையாக இருக்கின்றதென்றால், அப்போது மனிதனுக்கு உடனே அதற்கான உணர்வு ஏற்பட்டு விட்டால் அதாவது நான் ஆழ்ந்த தூக்கத்திற்கு செல்ல இருக்கின்றேன் என்ற உணர்வு ஏற்பட்டால் பிறகு அவன் கீழே விழுந்து விடாமல் விழித்து விடுகிறான்.

எனவேதான் அல்லாஹ் கூறுகின்றான்: உங்களுக்கு எத்தகைய ஒரு நிம்மதிக்கான நிலையை வழங்கினேன் என்றால் அது தூக்கத்திற்கு ஒப்பானதாகும். ஆனால் அது ஆழ்ந்த தூக்கத்தைப் போன்று கிடையாது. அதாவது உங்களது உறுப்புகள் மீதே உங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லாமல் இருப்பது போன்று அல்ல. மாறாக அது உங்களுக்கு நிம்மதியை தரக்கூடியதாக இருந்தது.

ஹஸ்ரத் அபூதல்ஹா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இது புகாரியில் இடம் பெற்றுள்ளது. அதாவது உஹது நாளன்று போரின் சந்தர்ப்பத்தில் எங்களை தூக்கம் ஆட்கொண்டது. ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் கூறுகின்றார்கள்: எனது வாள் கையிலிருந்து விழுந்தபோது நான் அதை பிடித்துக் கொண்டேன்.

ஆக இந்த ஹதீஸ் கூறுவது என்னவென்றால், அது எத்தகைய தூக்கத்தின் நிலையாக இருந்ததென்றால், கைகளிலிருந்து கீழே பொருட்கள் விழுந்தோ அல்லது நாங்கள் நடந்து சென்று விழுந்தது போன்றோ அல்ல. மாறாக மன அமைதிக்கான நிலையாக இருந்தது. இருப்பினும் ஒரு குறிப்பிட்ட அளவு நாங்கள் எங்களது உடல் உறுப்புகளின் மீது அதிகாரம் செலுத்தும் வகையில்தான் இருந்தோம். விழ முற்பட்ட போது நாங்கள் அதை பிடித்துக் கொண்டோம்.

திர்மிதி அப்வாபுத் தஃப்ஸீரில் ஹஸ்ரத் அபூ தல்ஹா அவர்களிடமிருந்து இந்த அறிவிப்பு வந்துள்ளது. உஹது போர் நாளன்று தலை தூக்கி பார்த்தபோது ஒவ்வொரு நபரும் தமது கேடயத்திற்குப் பின்னால் குனிந்திருந்தார். சோர்வின் காரணமாக நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. சஹாபாக்களின் இந்த நிலைமையிலும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அவர்களுக்கு மன அமைதிக்கான நிலைமை கிடைத்துக் கொண்டிருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த நிலைமையானது சோர்வடைந்துள்ள ஒரு வீரரின் மீது ஏற்படுகின்ற நிலையைப் போன்று இருக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்த இந்த அனைத்து போர் வீரர்கள் மீதும், எதிரிகளுக்கு எதிராக போரில் மும்முரமாக செயல்பட்டவர்கள் மீது திடீரென வானத்திலிருந்து ஒன்று இறங்கியது. மேலும் அந்த நிலையானது அவர்களை மூடியது. மேலும் அந்த சந்தர்ப்பத்தில் இந்த மன அமைதி அவர்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாக இருந்தது. தமது உறுப்புகளை வலுவூட்டுவதற்கும், அதை புதுப்பிப்பதற்கும், தூங்குவதற்கும் அவர்களிடம் நேரம் இருக்கவில்லை. இத்தகைய நிலையில், இத்தகைய சோர்வடைந்த நிலை இருக்குமென்றால் அப்படிப்பட்ட நிலை மனிதனுக்கு ஏற்படத்தான் செய்கின்றது.

எவ்வாறிருப்பினும், முழு சமுதாயமும் ஒரே நேரத்தில் எப்படிப்பட்ட தூக்கத்தின் நிலைக்கு ஆளாகியது என்றால் அப்போது போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எதிரிகளிடமிருந்து கடுமையான அபாய நிலை இருந்தது. இருப்பினும் எந்த அபாயமும் ஏற்படாதது ஒரு அற்புதமே ஆகும். இது தற்செயலாக நடைபெற்ற ஒன்றல்ல. இதுவொரு அற்புதமாகும். இது அல்லாஹ்வின் புறமிருந்து ஒரு குறிப்பான மன அமைதியின் நிலை அந்த நேரத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

(ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் 17 பிப்ரவரி 1994 ஆம் ஆண்டு வழங்கிய தர்ஸுல் குர்ஆனிலிருந்து...)

ஒரு யூத பெண் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கிய விஷம் கலந்த ஆட்டின் மாமிசத்தை ஹஸ்ரத் பிஷர் அவர்களும் உண்டார்கள். ஹஸ்ரத் பிஷர் அவர்கள் ஒரு துண்டை முழுங்கியதும், அங்கிருந்து எழுவதற்கு முன்பே அவர்களது நிறம் மாறியது. இதன் வேதனையின் காரணமாக ஒரு வருடம் வரை இந்த நிலை அன்னாரிடம் இருந்தது. எதுவரை என்றால் ஒருவரது உதவி இல்லாமல் அன்னாரால் திரும்பி கூட படுக்க முடியாது. இந்த நிலையிலேயே அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

மேலும் இவ்வாறும் கூறப்படுகிறது. அதாவது அவர்கள் தமது இடத்தை விட்டு செல்வதற்குள் விஷம் அதிகமாக இருந்ததனால் அதை உண்டதன் காரணமாக அன்னாரது மரணம் நிகழ்ந்து விட்டது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 291 பிஷர் பின் பரா – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் பிஷர் அவர்கள் மரணமடைந்தபோது அன்னாரது தாயாருக்கு அதனால் மிகுந்த துக்கம் ஏற்பட்டது. அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, யா ரஸூலல்லாஹ் (ஸல்)! பிஷரின் மரணம் பனூ சலமாவை அழித்து விடுமா? மரணித்தவர்கள் ஒருவர் மற்றவரை அடையாளங்கண்டு கொள்வார்களா? என்று கேட்டார்கள். அவர்கள் செய்த செயலின் காரணமாக அவர்கள் அழிந்து போவார்கள். மேலும் பிஷருக்கு சலாத்தை எட்ட வைக்க முடியுமா? என்றும் கேட்டார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களை விட்டு விட்டு, நிராகரிப்பாளர்களை (உங்களுடைய) நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் உங்களுக்கு எதிராக மிகத் தெளிவான குற்றச்சாட்டி(னைச் சுமத்துவத)ற்குரிய வாய்ப்பை இறைவனுக்குக் கொடுக்க விரும்புகின்றீர்களா? (4:145)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! பிஷரின் தாயே! எனது உயிர் எந்த இருப்பின் கையில் இருக்கிறதோ அதன் மீது ஆணையாக! எவ்வாறு பறவைகள் மரத்தில் ஒன்று மற்றொன்றை அடையாளங்கண்டு கொள்கின்றதோ அதேபோன்றுதான் சுவர்க்கவாசிகளும் ஒருவர் மற்றவரை அடையாளங்கண்டு கொள்வர் என்று கூறினார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 3 பக்கம் 132... – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது மரணமடைந்தவர்கள் அடையாளங்கண்டு கொள்வார்கள். அவர்கள் மூலமாக சலாத்தை அனுப்பலாம்.

ஓர் அறிவிப்பில் இந்த சொற்கள் வந்துள்ளது. அதாவது பனூ சல்மாவின் கோத்திரத்தில் எவர் வஃபாத்தானாலும் ஹஸ்ரத் பிஷர் அவர்களின் தாயார் அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த விஷயத்தை செவியுற்ற பிறகு, அவர்களிடம் சென்று, இந்த நபரே! உம்மீது சாந்தி உண்டாவதாக. அதற்கு அவர் உம்மீதும் என்று பதிலளிப்பார். பிறகு அவர்கள், பிஷருக்கு எனது சலாத்தை எட்ட வையுங்கள் என்று கூறுவார்கள்.

(மர்காத்துல் மஃபாதீஹ்... தொகுதி 4 பக்கம் 99 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆக இவ்வாறு பனூ சலமாவில் எவர் மரணிக்கும் தருவாயில் இருந்தாலும், ஹஸ்ரத் பிஷர் அவர்களின் தாயார் அவரிடம் சென்று பிஷருக்கு சலாத்தை எட்ட வைக்குமாறு கூறுவார்கள். அதாவது அவர்கள் கூறியதன் பொருள் என்னவென்றால், பிஷரின் மரணத்தின் மூலமாக மிகவும் துக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே பிஷருக்கு சலாத்தை எட்ட வைக்க முடியுமா? என்பதே ஆகும். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஆம்! என்று கூறியதும் அவரது தாயார், மரணித்த ஒவ்வொருவர் மூலமாகவும், நீங்கள் சுவர்க்கத்திற்கு சென்றால் எனது சலாத்தை எட்ட வையுங்கள் என்ற தூதுச் செய்தியை வழங்குவார்கள்.

ஓர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் பிஷர் அவர்களின் தங்கை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் அன்னாரின் இறுதி தருணத்தில் வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமது சகோதரருடன் நான் கைபர் மைதானத்தில் சாப்பிட்ட அந்த துண்டின் காரணமாக எனது நரம்புகள் வெட்டப்பட்டிருப்பதைப் போன்று உணர்கின்றேன்.

(அஸீரத்துன் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 82 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு யூத பெண் சஹாபாக்களிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு விலங்கின் எந்தப் பகுதியின் மாமிசம் மிகவும் விருப்பத்திற்குரிய என்று கேட்டார். அதற்கு சஹாபாக்கள், அன்னாருக்கு தொடைப் பகுதியிலுள்ள மாமிசம் மிகவும் விருப்பமானது என்று கூறினார்கள். எனவே அந்த பெண் ஆட்டை அறுத்து அதன் மாமிசத்தில் விஷத்தை கலந்தாள். குறிப்பாக மாமிசத்தின் எந்தப் பகுதி அன்னாருக்கு மிகவும் பிடிக்கும் என்று அறிந்திருந்தாளோ அங்கு அதிகமாக விஷத்தை தடவினாள்.

பிறகு சூரியன் மறைந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மாலை நேரத் தொழுகையை தொழுது விட்டு தமது கூடாரத்தை நோக்கி திரும்பி வந்து கொண்டிருந்தபோது தமது கூடாரத்திற்கு அருகில் ஒரு பெண் அமர்ந்திருப்பதைக் கண்டு, பீபீ உமக்கு இங்கு என்ன வேலை என்று கேட்டார்கள். அதற்கு அவள், அபூகாஸிமே! நான் உங்களுக்கு அன்பளிப்பு கொண்டு வந்துள்ளேன் என்று கூறினாள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடன் இருந்த சஹாபியிடம் இவள் தருகின்ற பொருளை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு அன்னார் சாப்பிட அமர்ந்தபோது பொறித்த அந்த கறியும் வைக்கப்பட்டது. அதிலிருந்து ஒரு துண்டை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சாப்பிட்டார்கள். அன்னாரது சஹாபியான ஹஸ்ரத் பஷீர் அவர்களும் ஒரு துண்டை சாப்பிட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் வரலாற்று நூல்களில் ஹஸ்ரத் பிஷர் பின் பரா அவர்களின் பெயர் சில இடங்களில் பஷீர் பின் பரா என்றும் எழுதுப்பட்டுள்ளது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் பஷீர் பின் பரா என்றே இங்கு எழுதியுள்ளார்கள். எனவே அப்போது மற்ற சஹாபாக்களும் மாமிசத்தை உண்பதற்காக முற்பட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சாப்பிடாதீர்கள். ஏனென்றால், மாமிசத்தில் விஷம் இருப்பதாக எனக்கு இந்த கை தெரிவித்தது என்று கூறினார்கள். அதாவது அன்னாருக்கு இல்ஹாம் இறங்கியது என்பது இதன் பொருளல்ல. மாறாக, இது அரபின் சொல்வழக்கு ஆகும். அதாவது இந்த மாமிசத்தை சாப்பிட்டபோது இதில் விஷம் கலந்திருப்பது தெரிய வந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது கைகள் பேசின. இதன் பொருள் என்னவென்றால், அந்த மாமிசத்தை உண்டபோது எனக்கு அதுபற்றி தெரிய வந்தது என்பதே ஆகும். ஏனென்றால் அடுத்த வாக்கியம் இதை விளக்குகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதன் விளக்கத்தில் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலகட்டத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு, ஒரு சுவரைப் பற்றி வருகின்றது. அதாவது அது இடிந்து விழ விரும்பியது என்று வந்துள்ளது. இதன் பொருள், அது விழுவதற்கான அடையாளம் வெளிப்பட்டு விட்டது என்பதாகும். ஆக இந்த இடத்தில் இதுவே பொருளாகும். இது சொல்வழக்காக சொல்லப்பட்டதாகும்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: எனவே பிஷர் பின் பரா அவர்கள் கூறினார்கள்: எந்த இறைவன் உங்களுக்கு கண்ணியத்தை வழங்கினானோ அவன் மீது ஆணையிட்டு நான் கூறுகின்றேன். அதாவது இந்த மாமிசத் துண்டில் விஷம் இருப்பது தெரிய வந்தது. நான் இதை எறிய வேண்டும் என எனது உள்ளம் விரும்பியது. ஆனால் நான் அவ்வாறு செய்தால் உங்களது இயல்பின் அது தீய தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும் உங்களது உணவு வீணாகி விடும் என நான் எண்ணினேன். எனவே நீங்கள் இந்த துண்டை முழுங்கியதும் நானும் முழுங்கினேன். ஆனால் எனது உள்ளத்தில் இதில் விஷம் இருப்பதாக சந்தேகம் இருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த துண்டை முழுங்கக்கூடாது என்று எனது உள்ளம் நாடியது. எனவே இதன் காரணமாக சிறிது நேரத்தில் பஷீர் அவர்களின் உடல் மோசமானது.

இன்னும் சொல்வதென்றால் சில அறிவிப்புகளில் அன்னார் கைபரிலேயே மரணித்து விட்டார்கள் என்று வந்துள்ளது. இன்னும் சில அறிவிப்புகளில், இதற்குப் பிறகு சிறிது காலம் நோயுற்றிருந்ததாகவும், அதற்குப் பிறகு மரணமடைந்ததாகவும் வந்துள்ளது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதன் சில மாமிசத்தை அவளுடைய நாய்க்கு முன்பாக போட்டார்கள். எனவே அது அதனை உண்டதனால் மரணித்து விட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த பெண்ணை அழைத்து நீங்கள் இந்த ஆட்டில் மாமிசத்தை கலந்துள்ளீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவள் உங்களுக்கு இதை அறிவித்துக் கொடுத்தது யார்? என்று கேட்டாள். அப்போது அன்னாரது கரங்களில்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் ஏதேனும் நன்மையை வெளிப்படுத்தினாலோ அல்லது அதை மறைத்து வைத்தாலோ அல்லது (ஒருவருடைய) தீமையை மன்னித்தாலோ நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் பேராற்றல் பெற்றவனும் ஆவான் (என்பதைத் தெரிந்து கொள்க. (4:150)

Faizal Hameed Ilahi, Tittacherry

அந்த ஆட்டின் மாமிசம் இருந்தது. எனவே அன்னார் இந்த கைதான் அறிவித்துக் கொடுத்தது என்று கூறினார்கள். எனவே அந்த பெண், அன்னார் மீது இரகசியம் வெளிப்பட்டு விட்டது என்று புரிந்து கொண்டாள். மேலும் விஷம் கலந்திருப்பதை ஒப்புக் கொண்டாள்.

இதற்குப் பிறகு அன்னார் அந்த பெண்ணிடம், இந்த விருப்பமற்ற செயலை செய்ய உம்மை எந்த விஷயம் தூண்டியது என்று கேட்டார்கள். அதற்கு அவள், எனது சமுதாயத்துடன் உங்களது சண்டை நடந்தது. எனது உறவினர்கள் இந்த சண்டையில் கொல்லப்பட்டார்கள். எனவே எனது உள்ளத்தில் உங்களுக்கு விஷம் கொடுக்க வேண்டும் என்றும், அந்த செயல் மனித திட்டமாக இருப்பின் இவரிடமிருந்து நமக்கு இரட்சிப்பு கிடைத்து விடும்; ஆனால் இவர் உண்மை நபியாக இருப்பார் என்றால் இறைவனே இவர்களை பாதுகாப்பான் என்ற எண்ணம் வந்தது என்று கூறினாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களது பேச்சை கேட்டு மன்னித்தார்கள். இதற்கான தண்டனை கொலை செய்வதே ஆகும். இருப்பினும் அன்னார் அந்த தண்டனையை வழங்கவில்லை.

இந்த சம்பவத்திலிருந்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு தம்மை கொல்ல வந்தவர்களைவும், தம்மைச் சார்ந்தவர்களை கொலை செய்ய வந்தவர்களையும் மன்னித்தார்கள் என்பது தெரிய வருகிறது. மேலும் உண்மையில் எவர் ஒருவர் உயிருடன் இருப்பது வருங்காலத்தில் மிகப்பெரிய குழப்பத்திற்கு காரணமாக அமையுமோ அவருக்கு அப்போதே அன்னார் தண்டனை வழங்கி விடுவார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 327–329)

எவ்வாறிருப்பினும் இது பொதுவான ஒரு கருத்தாகும். சில எதிரிகள் குற்றம் சுத்துகின்றனர். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் இந்த விஷத்தினால் ஏற்பட்டது என்று கூறுகின்றனர். சில வரலாற்று நூல்கள் இதைப் பற்றி விவாதித்துள்ளன. சில வரலாற்று ஆசிரியர்களும் இதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஷஹாதத்திற்கான அந்தஸ்தை வழங்குவதற்கு இந்த அறிவிப்புகளை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாகி விடுகின்றனர். அந்த அறிவிப்புகளில் இவ்வாறு வந்துள்ளது. அதாவது இந்த விஷத்தின் காரணமாக அன்னாருக்கு மரணம் நிகழ்ந்தது. ஆனால் உண்மையில் இது சரியான விஷயம் அல்ல. நமது ஆய்வுக் குழு சார்பாகவும் எனக்கு இது தொடர்பான ஒரு குறிப்பை அனுப்பியுள்ளார்கள். அதனையும் நான் இங்கு எடுத்துக் கூறி விடுகின்றேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: வரலாறு அல்லது வாழ்க்கை வரலாறு ஆகிய எதுவாக இருந்தாலும் அல்லது ஹதீஸ் நூலாக இருந்தாலும் ஒரு விஷயம் நிரூபிக்கப்பட்டதாகும் அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் ஒருபோதும் இந்த விஷத்தின் காரணமாக நிகழவில்லை. எவர் இவ்வாறு கூறுவாரோ அவருக்கு முதலில் அனைத்து அறிவிப்புகளின் மீதும் அறிவு இல்லை. அல்லது அவர் தவறிழைக்கின்றார் என்பதே அர்த்தம்.

உண்மையான விஷயம் என்னவென்றால், விஷம் கொடுக்கப்பட்ட சம்பவம் கைபர் போரின் போது நடைபெற்றதாகும். அது ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது ஏழாம் ஆண்டின் ஆரம்ப காலகட்டத்தில் நடந்த சம்பவமாகும். இதற்குப் பிறகு ஏறக்குறைய 4 ஆண்டுகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிருடன் இருந்தார்கள். ஆரோக்கியமான வாழ்க்கையை கழித்தார்கள். முன்னர் போர்களுக்கு சென்றதைப் போன்று இப்போதும் சென்று வந்தார்கள். இறை வணக்கம் மற்றும் இதர பணிகளிலும் எவ்வித வேறுபாடும் இல்லாமல் இருந்தது. ஏறக்குறைய 4 ஆண்டுகளுக்குப் பிறகு காய்ச்சல், தலை வலி ஏற்படுவது மேலும் அதற்குப் பிறகு மரணிப்பது ஆகியவற்றின் மூலமாக, ஏறக்குறைய நான்கு வருடங்களுக்குப் பிறகு அதற்கான தாக்கம் ஏற்பட்டது என்று எந்த அறிவாளியும் கூற மாட்டார்.

உண்மை என்னவென்றால், புகாரி மற்றும் இதர சில நூல்களில் ஒரு ஹதீஸ் வந்துள்ளது. அதன் மொழியாக்கத்தை சரியாக புரிந்து கொள்ளாததன் காரணமாக இந்த தவறான கருத்து வெளியிடப்படுகிறது. அதாவது இந்த விஷத்தின் தாக்கத்தினாலேயே அன்னாரது மரணம் நிகழ்ந்தது. ஆனால் இது சரியால்ல.

புகாரியில் இடம் பெற்றுள்ள அந்த ஹதீதின் மொழியாக்கத்தை நான் படித்து விடுகின்றேன். ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரண வேளையில் நோயுற்றிருந்தபோது இவ்வாறு கூறினார்கள்: ஆயிஷாவே! நான் கைபரில் உண்ட உணவின் தாக்கமானது எனக்கு எப்போதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இப்போது கூட அந்த விஷமானது எனது நரம்பைத் துண்டிப்பதைப் போன்று நான் உணர்கின்றேன்.

(சஹீஹுல் புகாரி.... ஹதீஸ் எண் 4428)

இந்த ஹதீஸின் மூலமாகவே, சில முஸ்லிம் விரிவுரையாளர்களும், ஹதீஸ் வல்லுனர்களும் இந்த துன்பத்தின் காரணமாகவே அன்னாரது மரணம் நிகழ்ந்தது என்று கூறியுள்ளார்கள். மேலும் இதனை முன்னால் வைத்தவாறு இதையும் விளக்கி உள்ளார்கள். அதாவது இதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஷஹீது அந்தஸ்தை வழங்கலாம். ஆனால் சிலரது பார்வையில் இந்த அறிவிப்புகள் இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இதில் அன்னாருக்கு ஏற்பட்ட ஒரேயொரு துன்பத்தை பற்றிய குறிப்பே உள்ளது. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அந்த நேரத்தில் ஏற்பட்டது. அனைவருக்கும் தெரிந்த விஷயம் என்னவென்றால், சில நேரங்களில் உடல் ரீதியிலான துன்பம் அல்லது காயம் அல்லது நோய் சில நேரங்களில் குறிப்பான சந்தர்ப்பங்களில் ஏதாவதொரு காரணமாக வெளிப்பட்டு விடுகிறது.

கைபரின் போது எந்த விஷயத்தையும், மாமிசத்தையும் அன்னார் உண்டார்களோ அறிவிப்பின் விளக்கத்திற்கு சென்றால் இவ்வாறும் வருகிறது. அதாவது விஷம் கலந்த மாமிசத்தை அன்னார் வாயில் போட்டு விட்டார்கள். ஆனால் விழுங்கவில்லை. ஆனால் அன்னார் விழுங்கினார்கள் என்று ஏற்றுக் கொண்டாலும் அன்னாரது ஆரோக்கிமான வாழ்க்கையானது அன்னரது மரணத்திற்கான காரணம் விஷம் உண்டதனால் ஏற்பட்டது என்பது ஒருபோதும் அல்ல என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் நோயின் காரணமாக வயிற்றில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக அது அதிகமானது. இது நடைமுறையிலுள்ள விஷயம் ஆகும். சில நேரங்களில் அன்னாரது உடலில் உட்புறமாக காயங்களும் ஏற்பட்டுள்ளன. மேலும் சில நேரங்களில் சாப்பிடும் போது அதைப் பற்றிய உணர்வு இருந்தது.

ஹதீது நூல்களில் இது தொடர்பான விரிவான விளக்கம் இடம் பெற்றுள்ளது. மேலும் இதுவும் இடம் பெற்றுள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உணவில் விஷம் கலந்திருப்பது தெரிய வந்தது. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களை உணவு உண்பதிலிருந்து தடுத்தார்கள். எனவே விஷத்தை கலந்த அந்த பெண்ணை அழைத்து விசாரித்தார்கள். எனவே அந்த பெண்ணும், நீங்கள் இறைவன் புறமிருந்து உண்மை

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் நன்றி செலுத்தி நம்பிக்கையும் கொள்வீர்களாயின் உங்களைத் தண்டிப்பதில் அல்லாஹ்விற்கு என்ன கிடைக்கப் போகிறது? அல்லாஹ் மதிக்கக் கூடியவனும் நன்று அறிபவனுமாவான். (4:148)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

நபி என்றால் பிறகு நீங்கள் தப்பித்து விடுவீர்கள். இல்லையென்றால் உங்களிடமிருந்து எங்களுக்கு இரட்சிப்பு கிடைத்து விடும். ஏனென்றால் அந்த யூத பெண்மணி அன்னார் அந்த விஷயத்திலிருந்து தப்பித்ததற்கான அறிவிப்பைச் செய்கின்றார். இந்த கொடிய விஷத்தை உண்ட பிறகும் அன்னார் காப்பாற்றப்பட்டார்கள்.

இன்னும் சொல்வதென்றல், அந்த பெண்மணி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதற்கான குறிப்பும் இடம் பெற்றுள்ளது. எதுவாயினும் சரி அந்த யூத பெண்மணி அன்னார் இந்த விஷத்தினால் மரணமடைந்தார் என்று ஏறவில்லை. மேலும் இதனை ஒரு அற்புதமாக கூறுகின்றாள். ஆக, அவளின் விஷத்தினால் தான் அன்னாரது மரணம் நிகழ்ந்தது என்று கூறுவது ஒருபோதும் சரியானது கிடையாது. இதைப் பற்றி மேலும் எஞ்சியவற்றை அடுத்து எடுத்துக் கூறுவேன். இன்ஷா அல்லாஹ்.

இப்போது நான் இரண்டு மர்ஹூமீன்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை ஜுமுஆவிற்குப் பிறகு நான் தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா, மதிப்பிற்குரிய நஸீர் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் ராஜன்பூரைச் சார்ந்த மதிப்பிற்குரிய அலி முஹம்மது சாஹிப் அவர்களின் மகனாவார்கள். 21 நவம்பர் 2019 அன்று தமது 63 வது வயதில் அன்னார் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

மர்ஹூமின் குடும்பத்தில் அன்னாரது பாட்டனாரான முஹம்மது தீன் சாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அன்னார் பிரோஸ்பூர் மாவட்டத்திலுள்ள மல்லியான் என்று ஊரில் வசிக்கக் கூடியவராக இருந்தார்கள். அவர்கள் தனது மூத்த சகோதரரான மதிப்பிற்குரிய இலாஹி பக்ஷ் சாஹிப் அவர்களுடன் 1907 ஆம் ஆண்டு கடிதத்தின் மூலமாக பைஅத் செய்தார்கள். பிறகு 1908 ஆம் ஆண்டு காதியான் ஜல்ஸாவிற்கு சென்றார்கள். அங்கு முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கரங்களில் பைஅத் செய்யும் நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

மர்ஹூம் நஸீர் சாஹிப் அவர்கள் ராஜன் பூரில் மாவட்ட துணை அமீராகவும், நாயிப் ஸயீம் அன்ஸாருல்லாஹ், மற்றும் சத்ர் ஆகிய தொண்டுகளை ஆற்றியுள்ளார்கள். ஐவேளை தொழுகையையை ஜமாஅத்தாக பேணக் கூடியவர். கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தார்கள். வீட்டிலுள்ள அனைத்து சகோதரர்களுக்கும், மருமகன் மருமகள் ஆகிய அனைவருக்கும் குறித்த நேரத்தில் தொழுவதற்கு நினைவூட்டி வருவார்கள். ஃபஜர் நேரத்தில் முழு வீட்டையும் சுற்றி வருவார்கள். அனைவரையும் ஃபஜர் தொழுகைக்காக எழுப்புவார்கள். திருக்குர்ஆனை தாமும் ஓதி வந்தார்கள். மேலும் மக்களிடமும், தனது உறவினர்களிடமும், குழந்தைகளிடமும் முறையாக ஓதி வருமாறு கூறிவார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை தாமும் படித்து தமது பிள்ளைகள், உறவினர்கள், சகோதரர்கள் ஆகியோரிடமும் படிப்பதன் பக்கம் கவனமூட்டுவார்கள். அதேபோன்று குத்பாவை முறையாக MTA வில் கேட்பார்கள். வீட்டிலுள்ள அனைவரும் குத்பாவை கேட்டார்களா? இல்லையா? என்பதையும் உறுதி செய்து கொள்வார்கள். கடுமையான எதிர்ப்புக்குப் பிறகும் கூட தப்லீக்கிற்கான எந்த சந்தர்ப்பத்தையும் கை நழுவ விடமாட்டார்கள். வீட்டிலுள்ளவர்கள் கவனமூட்டினாலும் அன்னார், அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரைப் பற்றிய தூதுச் செய்தியை நான் கொண்டு சேர்க்கவில்லை என்றால் நான் அல்லாஹ்விற்கு எந்த முகத்தை காண்பிப்பேன் என்று பதில் கூறுவார்கள். அன்னார் மூஸி ஆவார்கள். தமக்குப் பின்னால் மனைவி மட்டுமின்றி ஒரு மகளையும் மூன்று மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரது ஒரு மகன் காலித் அஹ்மது சாஹிப் முரப்பி ஆவார்கள். இன்றைய நாட்களில் மேற்கு ஆப்ரிக்காவில் தொண்டாற்றி வருகின்றார்கள். செயல் களத்தில் அவர்கள் பணி செய்வது வருவதால் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை.

அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. கருணையுடன் நடந்து கொள்வானாக. அவர்களது சந்ததிகளுக்கும், பிள்ளைகளுக்கும் அவர்களது நன்மையை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா,ஷேகூபூரா மாவட்டத்தைச் சார்ந்த தற்போது கனடாவில் வசித்து வருகின்ற மியான் அல்லாஹ் தத்தா சாஹிப் அவர்களின் மகனாகிய மதிப்பிற்குரிய அதாவுல் கரீம் முபஷ்ஷிர் சாஹிப் அவர்களுடையதாகும். 13 நவம்பர் அன்று தனது 75 ஆவது வயதில் அவர்களது மரணம் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

மர்ஹூமின் குடும்பத்தில் அன்னாரது தந்தை மதிப்பிற்குரிய மியான் அல்லாஹ் தத்தா சாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. 1934 ஆம் ஆண்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கரங்களில் பைஅத் செய்தார்கள். அஹ்மதி ஆன பிறகு தமது முழு வாழ்நாளையும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களைப் போன்று கழித்தார்கள். எப்போதும் தப்லீக் செய்து வந்தார்கள். அதிக குடும்பங்களை அஹ்மதி ஆக்கினார்கள். மேலும் முழு வாழ்நாளையும் வக்ஃபின் ஆன்மாவோடு ஜமாஅத்திற்கு தொண்டாற்றினார்கள். ஜமாஅத்தின் பல்வேறு பொறுப்புகளை ஆற்றியுள்ளார்கள். 2007 ஆம் ஆண்டு கனடாவிற்கு குடிபெயர்ந்தார்கள். அங்கு தமது ஜமாஅத்தில் செகரட்டரி இஷாஅத்தாக தொண்டாற்றும் நற்பாக்கியத்தை பெற்றார்கள்.

பிறகு அவர்களுக்கு நுரையீரலில் நோயின் காரணமாக நிரந்தரமாக ஆக்ஷிஜன் பொருத்தப்பட்டிருந்தது. அவர்களுக்கு எப்போது வரை ஆரோக்கியம் இருந்ததோ அதுவரை வீல் சேரில் அமர்ந்தவாறு தொடர்ச்சியாக பள்ளிவாசலுக்கு வருகை தந்தார்கள். நோயை மிகவும் தைரியத்துடன் எதிர்கொண்டார்கள். ஒருபோதும் எவ்வித முறையீடும் செய்தது கிடையாது. ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத்துடன் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வு மிக்க தொடர்பை வைத்திருந்தார்கள். அன்பின் தொடர்பு இருந்தது. மிகவும் புத்திக் கூர்மை உடையவர். சிறந்த வழிகாட்டி ஆவார். தூய்மையான உள்ளம் படைத்தவர். அன்னாரது குடும்பத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும், என்னுடன் மிக நெருங்கிய தொடர்பில் இருந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஒவ்வொருவருடனும் கலப்பற்ற முறையிலும், பயனளிக்கும் வகையிலும் இருந்தார்கள். ஒருபோதும் எவரைப் பற்றியும் புகார் கூறியது கிடையாது. ஒவ்வொருவருடனும் அன்பின் தொடர்பு இருந்தது. மர்ஹூம் மூஸி ஆவார்கள்.

குடும்பத்தில் மனைவி மட்டுமின்றி இரண்டு மகள்கள் மற்றும் இரண்டு மகன்கள் உள்ளார்கள். அன்னாரது மகன் அதாவுல் மன்னான் தாஹிர் சாஹிப் அவர்கள் முரப்பி ஆவார்கள். இன்றைய நாட்களில் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் அலுவலகத்தில் நாயிப் நாஸிர் ஆவார்கள். அங்கு தொண்டாற்றி வருகின்றார்கள். ஒரு பேரன் ஜாஸிப் அஹ்மது ஜாமிஆ அஹ்மதிய்யா கனடாவில் படித்து வருகின்றார். அன்னார் ஜமாஅத்தின் கவிஞராக திகழ்ந்தார்கள். அப்துல் கரீம் குத்ஸி அன்னாரது மூத்த சகோதரர் ஆவார். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக. அவர்களது பிள்ளைகளுக்கும் அவர்களது நன்மையை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நன்மை செய்பவராகி இப்ராஹீமின் நேரான மார்க்கத்தைப் பின்பற்றுகிறவரை விட அழகான மார்க்கத்தையுடையவர் யார்? அல்லாஹ் இப்ராஹீமைத் தன் நெருங்கிய நண்பராக ஆக்கிக் கொண்டான். (4:126)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வு கொண்ட சஹாபி ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா வாகிஃபி அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**தபூக் போரின் சந்தர்ப்பத்தில் பின்னால் தங்கி விட்ட சஹாபாக்கள் தொடர்பான குறிப்பு**

**தலைமையக வக்ஃபே நவ்வின் புதிய website துவங்கப்பட்டதற்கான அறிவிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 டிசம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **06 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் ஹிலால் (ரலி) ஆவார்கள். அன்னாரது முழுப் பெயர் ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா வாகிஃபி ஆகும். அன்னார் அன்ஸார் கோத்திரத்தின் அவ்ஸ் குடும்பத்தின் பனூ வாகிஃபைச் சார்ந்தவர் ஆவார்கள். அன்னாரது தந்தையின் பெயர் உமைய்யா பின் ஆமிர் ஆகும். தாயாரின் பெயர் அனீஸா பின்த் ஹிதம் ஆகும். இவர்கள் ஹஸ்ரத் குல்ஸூம் பின் ஹிதம் அவர்களின் சகோதரி ஆவார்கள். குபாவில் இவர்களது வீட்டில்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா ஹிஜ்ரத் செய்தபோது தங்கினார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 380,381 ஹிலால் பின் உமைய்யா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 383 ஹதீஸ் எண் 2995 ஹிலால் பின் உமைய்யா – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா அவர்கள் இரண்டு திருமணங்கள் செய்துள்ளதாக வந்துள்ளது. ஒன்று, ஃபரீஹ் பின்த் மாலிக் பின் துஹ்ஷம் அவர்களுடனும், மற்றொன்று மலீகா பின்த் அப்துல்லாஹ் அவர்களுடனும் திருமணம் செய்து கொண்டார்கள். அன்னாரது இரண்டு மனைவிகளுக்கும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியம் கிடைத்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கரங்களில் இவர்கள் பைஅத் செய்தனர்.

(தப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 282,285... – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர் ஆவார்கள். அன்னார் பனூ வாகிஃப் கோத்திரத்தின் சிலையை உடைத்தார்கள். மேலும் மக்கா வெற்றியின் நாளன்று அன்னாரது கோத்திரத்தின் கொடி அவர்களிடம் இருந்தது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 381 ஹிலால் பின் உமைய்யா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் பத்ர், உஹது மற்றும் அதற்குப் பிறகு நடைபெற்ற போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொள்ளும் நற்பாக்கியத்தை பெற்றார்கள். ஆனால் தபூக் போரில் இவர்களால் கலந்து கொள்ள முடியவில்லை.

இப்னு ஹிஷாம் அவர்கள் தமது நூலில் பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களின் குறிப்பில் ஹஸ்ரத் ஹிலால் அவர்களின் பெயர் இடம்பெறவில்லை. எனினும் சஹீஹ் புகாரியில் அன்னார் பத்ர் போரில் பங்கு பெற்ற சஹாபி என்று வந்துள்ளது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 381 ஹிலால் பின் உமைய்யா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி...)

தபூக் போரில் எவ்வித காரணமுமின்றி கலந்து கொள்ளாத மூன்று அன்ஸார் சஹாபாக்களில் ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா அவர்களும் ஒருவர் ஆவார்கள். இரண்டாவது சஹாபி, கஅப் பின் மாலிக் ஆவார். மூன்றாவது சஹாபி, முராரா பின் ரபீஹ் ஆவார்கள். இவர்கள் தொடர்பாக திருக்குர்ஆனில் இந்த வசனமும் அருளப்பட்டது.

அதாவது மேலும், பின்தங்கிவிட்ட அந்த மூவருக்கும் (அருள் செய்தான்). பூமி விரிவானதாக இருந்துங்கூட அவர்களுக்கு அது குறுகிவிட்டது. அவர்களின் உள்ளங்களும் அவர்களுக்கு இறுகி விட்டன. அவனிடம் திரும்புவதனைத் தவிர அல்லாஹ்விடமிருந்து அடைக்கலம் எதுவுமில்லை என்று அவர்கள் நினைத்தனர். அப்போது அவர்களின் நிலையைக் கண்டு அவர்களும் கழிவிரக்கங் கொள்ள அல்லாஹ் அவர்களுக்கு அருள் செய்தான். நிச்சயமாக அல்லாஹ் மேன்மேலும் கழிவிரக்கத்தை ஏற்றுக் கொள்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (9:118)

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 381 ஹிலால் பின் உமைய்யா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தபூக் போர் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு நடைபெற்றது. சஹீஹ் புகாரியில் இது தொடர்பாக ஒரு விரிவான விளக்கமும் உள்ளது. அதில் இந்த மூன்று சஹாபாக்களும் பின்தங்கிவிட்ட சம்பவம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் அவர்களின் பேரனான அப்துர் ரஹ்மான் அவர்கள் தமது தந்தையான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் கஅப் அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் கஅப் அவர்கள் கண் பார்வையை இழந்தபோது அவர்களைப் பிடித்துக் கொண்டு அவர்கள் அழைத்துச் செல்வார்கள்.

ஹஸ்ரத் கஅப் அவர்கள் தொடர்பான இந்த அறிவிப்பு மிக நீண்டதாகும். அதில் ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா அவர்களின் குறிப்பும் இடையில் வருகின்றது. ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் அவர்கள்

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்விடத்தும் அவனுடைய தூதரிடத்தும் நம்பிக்கை கொண்டு (தூதர்களாகிய) அவர்களுள் எவருக்கிடையிலும் வேற்றுமை பாராட்டாதவர்களுக்கு, அவர்களின் நற்பலன்களை விரைவிலேயே அவன் வழங்குவான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (4:153)

M.Y. Shahul Hameed, Melapalayam

தபூக் போரிலிருந்து பின்தங்கிவிட்ட அந்த சம்பவத்தை இவர்கள் செவியுற்றார்கள். ஹஸ்ரத் கஅப் அவர்கள் கூறினார்கள்:

தபூக் போரைத் தவிர, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புரிந்த எந்தப் போரிலும் நான் கலந்து கொள்ளாமல் இருந்ததில்லை. இது தவிர நான் பத்ர் போரிலும் பின்தங்கி விட்டேன். எனினும் போரில் பின்தங்கிவிட்ட எவர் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோபத்தை வெளிப்படுத்தவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள், குரைஷிகளின் வணிகக் குழுவை வழி மறிக்க நாடியே வெளியேறினார்கள். ஆனால் விளைவு என்னவாயிற்று என்றால், போர் செய்யும் திட்டம் இல்லாமல் அவர்கள் வெளியேறியிருந்தும், அல்லாஹ் அவர்களை எதிரிகளை எதிர்கொள்ளச் செய்தான்.

பத்ர் போர் தொடர்பாக அவர்கள் கூறுகின்றார்கள்: பத்ர் போரிலும் நான் கலந்து கொள்ளவில்லை. ஆனால் அதில் கலந்து கொள்ளாததன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோபத்தை வெளிப்படுத்தவில்லை. மேலும் அக்பாவின் இரவில், இஸ்லாத்தில் நாங்கள் நிலைத்திருப்போம் என நாங்கள் உறுதிமொழி அளித்தோம். இதற்குப் பதிலாக பத்ர் போரில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்க வேண்டும் என நான் விரும்பியதில்லை. எனினும் மக்களிடம் பத்ர் போர் இதை விட மிகவும் பிரசித்தி பெற்ற ஒன்றாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: தபூக் போரில் நான் கலந்து கொள்ளாத போது இருந்த உடல் பலமும், பொருள் வசதியும் (என் வாழ்நாளில்) எனக்கு இருந்ததில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒரே நேரத்தில் இரண்டு ஒட்டகங்கள் ஒருபோதும் என்னிடம் இருந்ததில்லை. ஆனால் அந்தப் போரின்போது நான் ஒரே நேரத்தில் இரண்டு ஒட்டகங்களை வைத்திருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதாவதொரு போருக்கு செல்ல விரும்பினால் அதனை அன்னார் வேறெங்கோ செல்வது போன்று அதை மறைத்தே வைத்திருப்பார்கள்.

பொதுவாக பெருமனார் (ஸல்) அவர்கள் போரின்போது அந்த விஷயத்தை மறைத்து வைப்பார்கள். மேலும் பயணத்தையும் நீண்டதாக ஆக்கிக் கொள்வார்கள். அல்லது மாற்று வழியில் செல்வார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஆனால் தபூக் போர் சந்தர்ப்பத்தின்போது பெருமானார் (ஸல்) அவர்கள் கடும் வெயிலில் படையெடுத்துச் சென்றார்கள். அதாவது தொலைதூரப் பயணம் மேற்கொள்ள வேண்டியதாக இருந்தது. மேலும் பாலைவன வனாந்திரப் பிரதேசத்தைக் கடந்து செல்லவேண்டியதிருந்தது. மேலும் அதிக எண்ணிக்கையிலான எதிரிகளைச் சந்திக்க வேண்டியதிருந்தது. எனவே முஸ்லிம்கள், தங்களின் போருக்கான ஆயத்த ஏற்பாடுகளை செய்து கொள்ள முடியும் என்பதனால் இந்த நிலைமைகள் தொடர்பாக நாம் இந்த இடத்திற்கு செல்லவிருக்கின்றோம்; இவர்கள் தான் நமது எதிரிகள் என்பதையும் வெளிப்படையாகவே அன்னார் தெரிவித்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஒரு பெரும் எண்ணிக்கையில் முஸ்லிம்கள் இருந்தனர்.

ஹஸ்ரத் கஅப் கூறுகின்றார்கள்: போரில் கலந்து கொள்வதிலிருந்து பின்தங்கிவிட வேண்டும் என்று எவரும் விரும்பவில்லை. ஆனால் அல்லாஹ்விடமிருந்து இறை அறிவிப்பு வராத வரையில் (தான் போரில் கலந்து கொள்ளாத) விஷயம் பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் தெரிய வராது என்று எண்ணினர். பழங்கள் பழுத்து நிழல்கள் அடர்ந்து நின்ற வெயில் காலத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் போருக்குச் செல்ல ஆயத்தமானார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் முஸ்லிம்களும் பயண ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். எனவே நானும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு பயண ஏற்பாடுகளைச் செய்ய காலை நேரத்தில் சென்றேன். ஆனால் நான் எனது பயணத்திற்கான எந்த ஏற்பாட்டையும் செய்து முடிக்காமல் திரும்பி வந்து விடுவேன். பயண ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் புறப்படுவேன். ஆனால் மாலைப்பொழுதில் திரும்பி வந்து விடுவேன். எந்த ஏற்பாடும் செய்திருக்க மாட்டேன்.

மேலும் எனது உள்ளத்தில், அந்த ஏற்பாடுகளை செய்து முடிக்க என்னிடம்தான் பொருட்கள் இருக்கின்றதே என்று நான் கருதுவேன். எனது நிலை இப்படியே நீடித்துக் கொண்டே இருந்தது. எதுவரை என்றால் மக்கள் போருக்காக ஆயத்தமாகினர். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள், தம்முடன் முஸ்லிம்களை அழைத்துக் கொண்டு ஒரு காலை நேரத்தில் புறப்பட்டு விட்டார்கள். அப்போதும் நான் எனது பயணத்திற்கு வேண்டிய எந்த ஏற்பாட்டையும் செய்து முடிக்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் சென்ற பின் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் கழித்து பயண ஏற்பாடுளைச் செய்து கொண்டு அவர்களுடன் போய் சேர்ந்து கொள்வேன். ஏனென்றால் பயணத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் என்னிடம் இருக்கின்றன. எனவே என்னால் எளிதாக ஏற்பாடுகளை செய்ய முடியும் என்று எண்ணினேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் சென்ற பிறகு அடுத்த நாள் காலையில் நான் ஏற்பாடுகளை செய்யலாம் என்று எண்ணினேன். ஆனால் திரும்பி வந்து விட்டேன். எந்த ஏற்பாடும் செய்யவில்லை. பிறகு அடுத்த நாள் அதாவது மூன்றாவது நாளும் திரும்பி வந்து விட்டேன். எந்த முடிவையும் என்னால் எடுக்க முடியவில்லை. எனது நிலை இவ்வாறே இருந்தது. எதுவரை என்றால், விரைவாகப் பயணம் செய்தவாறு முஸ்லிம்களின் குழு மிக தொலைவிற்கு சென்று விட்டது. எனவே நான் உடனடியாக புறப்பட்டுச் சென்று படையினருடன் சேர்ந்து கொள்ளலாம் என்று எண்ணினேன். அப்படி நான் செய்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! ஆனால் அதற்கான பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லை.

பெருமானார் (ஸல்) அவர்கள் போருக்கு சென்ற பிறகு மதீனாவில் நான் மக்களிடையே சுற்றி வரும்போது எனக்கு பெரும் வருத்தமே ஏற்பட்டது. ஏனென்றால், பின்தங்கிவிட்ட நயவஞ்சகரைப் போன்று நான் பார்க்கப்பட்டேன். மேலும் நயவஞ்சகர் என சந்தேகிக்கப்பட்ட மனிதர்களையும், இறைவனால் சலுவை வழங்கப்பட்ட பலவீனர்களையும் தவிர வேறெவரையும் நான் பார்க்கவில்லை.

எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் தபூக் சென்றடையும் வரையில் என்னை நினைவு கூரவும் இல்லை. மேலும் என் தொடர்பாக கேட்டறியவும் இல்லை. அன்னார் (ஸல்) அவர்கள் தபூக்கில் மக்களிடையே அமர்ந்திருக்கும்போதுதான், கஅப் எங்கே? என்று கேட்டார்கள்.

அப்போது பனூ சலமாவைச் சார்ந்த ஒரு நபர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவரது இரு சால்வைகளும், அவற்றைத் தம் தோள்களில் போட்டு வலது பக்கமும், இடது பக்கமும் பார்த்துக் கொண்டிருப்பதும்தான் அவரை வரவிடாமல் தடுத்து விட்டன என்று கூறினார். அதாவது, ஒன்று அவரிடம் செல்வம் வந்து விட்டது. அல்லது அவரிடம் ஆணவம் ஏற்பட்டு விட்டது. எனவே அவரால் வர முடியவில்லை என்று கூறினார்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் அவர்கள் இதைக் கேட்டவுடன், நீங்கள் எத்தகைய தீய வார்த்தையை கூறியுள்ளீர்கள். அவ்வாறு ஒருபோதும் கிடையாது என்று கூறியவாறு பெருமானார் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவரைக் குறித்து நல்லதைத் தவிர வேறெதையும் நாங்கள் அறிந்திருக்கவில்லை. அவரிடம் எந்த பெருமிதமோ, ஆணவமோ, நயவஞ்சமோ கிடையாது என்று கூறினார்கள். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், மௌனமாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் பயணத்திலிருந்து திரும்பி வருகின்றார்கள் என்ற செய்தி எனக்கு வந்தடைந்ததும் எனக்கு கவலை ஏற்பட்டது. மேலும் சாக்குப் போக்குச் சொல்வதற்காக பொய்யான விஷயங்களை யோசிக்கத் தொடங்கினேன். நாளை பெருமானார் (ஸல்) அவர்களின் கோபத்திலிருந்து நான் எப்படி தப்புவேன்? என்று எண்ணினேன். அதற்காக நான் என்

குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரிடமும் இது தொடர்பாக ஆலோசனை கேட்டேன்.

ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவை நெருங்கி வந்து விட்டார்கள் என்று நான் கேள்விப்பட்டதும் நான் புனைந்து வைத்திருந்த பொய் என் மனதை விட்டு விலகி விட்டது. பொய்யான காரணம் எதையும் கூறி நபி (ஸல்) அவர்களிடமிருந்து ஒருபோதும் என்னால் தப்பித்துக் கொள்ள முடியாது என்று நான் எண்ணியவாறு அனைத்து உண்மையையும் எடுத்துக் கூற எண்ணினேன். நபி (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். அன்னார் ஏதாவதொரு பயணத்திலிருந்து வந்தால் முதலில் பள்ளிவாசலுக்குச் செல்வார்கள். இரண்டு ரக்அத்துகளை நஃபில் தொழுவார்கள். பிறகு மக்களை சந்திப்பதற்காக அங்கு அமர்ந்து கொள்வார்கள்.

அன்னார் இவ்வாறு செய்ததும், தபூக் போரில் பின்தங்கிவிட்டவர்களில் ஒவ்வொருவரும் அவர்களிடம் வந்து, எதற்காக அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்பதற்காக அவர்களுக்கு முன்னால் சத்தியம் செய்து சாக்குப் போக்குகளை எடுத்துக் கூறினார்கள். அவர்கள் 80 கும் அதிகமானவர்கள் ஆவர். அவர்கள் இத்தகைய சத்தியங்களை செய்து சாக்குப் போக்கு கூறினர். பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களின் வெளிப்படையான காரணங்களை ஏற்றுக் கொண்டு அவர்களிடம் பைஅத் வாங்கினார்கள். மேலும் அவர்களுக்காக இஸ்திஃபார் செய்தார்கள். மேலும் அவர்களின் உட்புற நிலையை அல்லாஹ்விடம் ஒப்படைத்தார்கள்.

அன்னார் கூறினார்கள்: நீங்கள் கூறுகின்ற வெளிப்படையான காரணத்தை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அல்லாஹ் உங்களை மன்னிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக. மேலும் இந்த விவகாரத்தை அல்லாஹ்விடமே நான் விட்டு விடுகின்றேன்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தேன். அவர்களுக்கு நான் சலாம் சொன்னபோது கோபத்திலிருப்பவர் எவ்வாறு புன்னகைப்பாரோ அது போன அன்னார் புன்னகைத்தார்கள். மேலும் முன்னால் வாருங்கள் என்று கூறினார்கள். நான் முன்னே வந்து அன்னாருக்கு முன்பாக அமர்ந்தேன். அப்போது அவர்கள் என்னிடம், எதனால் நீங்கள் பின்தங்கி விட்டீர்கள்? பயணத்தில் எங்களுடன் ஏன் கலந்து கொள்ளவில்லை? நீங்கள் பயணத்திற்கான வாகனத்தை வாங்கி வைத்துக் கொண்டிருக்கவில்லையா? என்று கேட்டார்கள்.

அதற்கு நான், அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்கள் அல்லாத வேறு எவரேனும் ஒரு உலகவாதிக்கு அருகில் நான் அமர்ந்து கொண்டிருந்தால் ஏதாவது பொய்யான சாக்குப் போக்குச் சொல்லி அவரது கோபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள உடனடியாக வழி கண்டிருப்பேன். ஏனென்றால் வாதம் செய்வதற்கான திறன் எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. என்னால் நல்ல சாக்குப் போக்குகளை கூற முடியும். ஆனால் அல்லாஹ்வின் மீது ஆணையாக! தங்களிடம் ஏதாவது பொய்யைச் சொல்லி இன்று உங்களை நான் என்னைக்கு குறித்து திருப்தியடையச் செய்து விட்டாலும், அல்லாஹ் வெகுவிரையில் என்மீது தங்களைக் கடுங்கோபம் கொள்ளச் செய்து விடுவான் என்று நான் நன்கு அறிந்துள்ளேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: தங்களிடம் நான் உண்மையைச் சொல்லி விட்டால் அது தொடர்பாக என்மீது தாங்கள் கோபப்படுவீர்கள். ஆயினும் அதனால் நான் அல்லாஹ்வின் மன்னிப்பை எதிர்பார்க்கிறேன். அல்லாஹ் மன்னிப்பான் என்று நம்புகின்றேன்.

மேலும் கஅப் அவர்கள் கூறினார்கள்: இல்லை; அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்னிடம் சாக்கு போக்கு கூறத்தக்க எந்த காரணமும் இல்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! தங்களை விட்டும் நான் பின்தங்கிவிட்ட அந்த நேரத்தில் எனக்கு இருந்த உடல் பலமும், வசதி வாய்ப்பும் அதற்கு முன் ஒருபோதும் எனக்கு இருந்ததில்லை.

இதை செவியுற்ற பெருமானார் (ஸல்) அவர்கள், இவர் உண்மையை கூறியுள்ளார் என்று கூறினார்கள். மேலும் கூறினார்கள்: எனக்கு முன்னால் இருந்து எழுந்து செல்லுங்கள். உங்கள் விஷயத்தில் அல்லாஹ்வே தீர்ப்பளிப்பான் என்று கூறினார்கள். உடனே நான் எழுந்து சென்றேன்.

அப்போது பனூ சலமாவைச் சேர்ந்த சிலர் என்னைப் பின்தொடர்ந்து வந்தார்கள். மேலும் என்னிடம், அல்லாஹ்வின் மீது ஆணையாக! இதற்கு முன்னால் எந்தப் பாவத்தையும் நீங்கள் செய்ததாக நாங்கள் கண்டதில்லை. போரில் கலந்து கொள்ளாதவர்கள் கூறிய அதே சாக்குப் போக்கை கூட அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சொல்லியிருக்கலாமே! என்று கூறினார்கள்.

ஏற்கெனவே இது தொடர்பாக கூறினேன். அத்தகைய மக்கள் ஏறக்குறைய 80 ற்கும் அதிகமானவர்களாக இருந்தனர்.

மேலும் அவர்கள் கூறினர்: நீங்கள் செய்த பாவத்திற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்கும் பாவமன்னிப்பே உங்களுக்குப் போதுமானதாக இருந்திருக்குமே!

ஹஸ்ரத் கஅப் அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த மக்கள் என்னை கடுமையாக ஏசிக் கொண்டே இருந்தனர். எந்த அளவுக்கு என்றால், நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம் திருப்பிச் சென்று இதற்கு முன் நான் சொன்னது பொய் என்று கூறி போரில் கலந்து கொள்ளாததற்கு ஏதாவது பொய்க் காரணத்தைச் சொல்லி விடலாமா என்று நான் எண்ணினேன்.

பிறகு என்னை தூண்டியவர்களிடம், என்னுடன் வேறு எவராவது இருக்கின்றார்களா? அதாவது பெருமானார் (ஸல்) அவர்களிடம் உண்மையை கூறியவர்கள் உண்டா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம். இரண்டு நபர்கள் இருக்கின்றனர். அவர்களும் நீங்கள் கூறியதையே கூறினர். மேலும் உங்களுக்குச் சொல்லப்பட்டதுதான் அவர்கள் இருவருக்கும் சொல்லப்பட்டது என்று கூறினார்கள்.

அதற்கு நான் அவர்கள் யார்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், முராரா பின் ரபீஹ் அம்ரி மற்றும் ஹிலால் பின் உமைய்யா வாகிஃபி ஆவார்கள் என்று பத்ர் போரில் கலந்து கொண்ட இரண்டு நல்ல மனிதர்களின் பெயர்களை என்னிடம் கூறினர். மேலும் இவர்கள் இருவரும் எனக்கு முன்மாதிரி ஆவர். மக்கள் இவர்களைப் பற்றி என்னிடம் கூறியதும் நான் அவர்களிடம் சென்றேன். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் போரில் கலந்து கொள்ளாத எங்களுடன் முஸ்லிம்கள் பேசக்கூடாது என்று தடுத்து விட்டார்கள். எனவே மக்கள் எங்களுக்கு முன்பாக வர மாட்டார்கள். எங்களை விட்டு விலகியே இருந்தார்கள். எங்களை அறியாதவர்களைப் போன்று நடந்து கொண்டனர். ஒரு புதிய இடத்திற்கு வந்ததைப் போன்று உணர்ந்தேன். ஏனென்றால் மக்கள் எங்களை புறக்கணித்தனர்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்: இதே நிலையில் ஐம்பது நாட்கள் இருந்தோம். என்னுடன் இருந்த இருவரும் அதாவது ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா மற்றும முராரா பின் ரபீஹ் ஆகியோர் மிகவும் வெட்கத்திற்கு ஆளானார்கள். எதுவரை என்றால் அவர்கள் தமது வீடுகளிலேயே அமர்ந்திருந்தவாறு அழுது கொண்டிருந்தார்கள். அவர்கள் வீட்டை விட்டு வெளியே வரவே இல்லை. ஹஸ்ரத் ஹிலால் அவர்கள் நிரந்தரமாக வீட்டிலேயே இருந்தவாறு அழுது கொண்டே இருந்தார்கள்.

ஹஸ்ரத் கஅப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இவர்களிலேயே மிகவும் இளைஞனாக இருந்தேன். இவர்களை விட கஷ்டங்களை சகித்துக் கொள்பவனாக இருந்தேன். நான் வீட்டை விட்டு வெளியேறி முஸ்லிம்களுடன் தொழுகையில் கலந்து கொண்டும், கடை வீதிகளில் சுற்றிக் கொண்டும் இருந்தேன். நான் வீட்டிலிருந்து கொண்டு அழுது கொண்டே இருக்கவில்லை. அவர்களைப் போன்று இஸ்திஃபார் மட்டும் செய்து

கொண்டிருக்கவில்லை. பாவ மன்னிப்பு வேண்டி வந்தேன். எனினும், கடை வீதிகளுக்கும் சென்று வந்தேன். பள்ளிவாசலுக்கு வந்து முஸ்லிம்களுடன் தொழுதும் வந்தேன்.

ஆனால் என்னிடம் எவரும் பேச மாட்டார்கள். நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம் செல்வேன். பள்ளியில் சபை கூடியிருந்தபோது சென்றேன். தொழுகையை முடித்துக் கொண்டு அவர்கள் அமர்ந்திருக்கும்போது அன்னாருக்கு சலாம் கூறுவேன். எனக்கு பதில் சலாம் சொல்வதற்காக அவர்கள் தம் உதடுகளை அசைக்கின்றார்களா, இல்லையா என்று எனக்கு நானே கேட்டுக் கொள்வேன். அன்னாருக்கு அருகில் தொழுகையை நிறைவேற்றுவேன். அப்போது அன்னார் என்னைப் பார்க்கின்றார்களா என்று அன்னாரை நான் கவனிப்பேன். அப்போது அவர்கள் முகம் திருப்பிக் கொள்வார்கள்.

மக்கள் என்னை புறக்கணித்துக் கொண்டே சென்றபோது நான் ஹஸ்ரத் அபூ கதாதா அவர்களின் தோட்டத்தின் சுவர் மீது ஏறினேன். அவர்கள் என் தந்தையின் சகோதரரின் மகனாவார்கள். மேலும் மக்களில் அனைவரையும் விட எனக்கு மிகவும் பிரியமானவரும் ஆவார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் சலாத்திற்கு பதிலளிக்கவில்லை. எனவே நான், அபூ கதாதாவே! அல்லாஹ்வை முன் வைத்து உம்மிடம் கேட்கின்றேன். அதாவது அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நான் நேசிக்கின்றேன் என்று நீர் அறிவீரா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் பதில் எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தார்கள். பிறகு மீண்டும் அவர்களிடம் கேட்டேன். அல்லாஹ் மீது ஆணையாக! அவர்கள் மௌனமாக இருந்தார்கள். பிறகு மூன்றாவது முறையாக அவர்களிடம் நான் கேட்டேன். அதற்கு அவர்கள், அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிவார்கள் என்று பதிலளித்தார்கள். இதைக் கேட்டு எனது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. எனவே நான் அந்த சுவரில் ஏறி குதித்து வெளியேறினேன்.

ஹஸ்ரத் கஅப் கூறுகின்றார்கள்: இந்த நிலையில் நான் ஒரு நாள் மதீனாவின் கடைத் வீதிகளில் நடந்து கொண்டிருந்தேன். அப்போது மதீனாவிற்கு உணவு தானிய விற்பனைக்காக வந்திருந்த ஷாம் நாட்டின் விவசாயிகளில் ஒருவர், கஅப் பின் மாலிக் எங்கே இருக்கின்றார் என்று எனக்கு யார் தெரிவிப்பார்? என்று கூறினார். இதைக் கேட்ட மக்கள், என்னை நோக்கி சைகை செய்தனர். உடனே அவர் என்னிடம் வந்து, கஸ்ஸான் நாட்டின் அரசனிடமிருந்து கொண்டு வந்திருந்த ஒரு கடிதத்தை எனக்கு கொடுத்தார்.

அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது: அம்மா பஃது! உங்கள் தோழர் உங்களுடன் கடுமையாக நடந்து கொண்டு உங்களை புறக்கணித்து விட்டார் என்று எனக்குச் செய்தி கிடைத்தது. உங்களை இழிவுபடுத்தி, உங்கள் உரிமைகள் வீணடிக்கப்படும் நாட்டில் நீங்கள் நீடிக்க வேண்டும் என்ற அவசியத்தை உங்களுக்கு அல்லாஹ் ஏற்படுத்தவில்லை. எனவே எங்களிடம் வந்து விடுங்கள். நாங்கள் உங்களிடம் நேசம் காட்டுகிறோம் என்று எழுதப்பட்டிருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இந்த கடிதத்தைப் படித்த உடன், இதுவும் ஒரு சோதனை ஆகும் என்று கூறிக் கொண்டு அதை எடுத்துச் சென்று அடுப்பில் போட்டு எரித்து விட்டேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஐம்பது நாட்களில் நாற்பது நாட்கள் கழிந்தபோது, பெருமானார் (ஸல்) அவர்களுடைய ஒரு தூதுவர் என்னிடம் வருவதை நான் கண்டேன். அவர் என்னிடம், பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் உங்கள் மனைவியை விட்டு விலகி விட வேண்டும் என்று உங்களிடம் கூறுகின்றார்கள். அதற்கு நான், அவளை விவாகரத்துச் செய்து விடவா? அல்லது என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டேன். அதற்கு அவர், அவரை விட்டு விலகி விட வேண்டும். அவரை நெருங்கக்கூடாது என்று கூறினார். இதைப்போன்றே மற்ற எனது இரண்டு நண்பர்களுக்கும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறி அனுப்பினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் என் மனைவியிடம், இந்த விவகாரம் தொடர்பாக அல்லாஹ் தீர்ப்பளிக்கும் வரையில் உன் குடும்பத்தாரிடம் சென்று அவர்களுடன் இரு என்று கூறினேன்.

ஹஸ்ரத் கஅப் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா அதாவது எந்த சஹாபி தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டு வருகிறதோ அவர்களது மனைவி பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, யா ரஸூலல்லாஹ் (ஸல்)! எனது கணவர் முதியவர் ஆவார். அவருக்கு எந்த பணியாளரும் இல்லை. நான் அவருக்கு தொண்டு செய்தால் தாங்கள் அதை வெறுக்க மாட்டீர்களே? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இல்லை. ஆயினும், அவருக்கு தொண்டாற்றி வாருங்கள். உணவு சமைப்பது, வீட்டு பணிகளை செய்து வாருங்கள். ஆனால் அவர் உங்களுக்கு அருகில் வரக்கூடாது என்று கூறினார்கள்.

அவரது மனைவி கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவரிடம் இதற்கான எந்த உணர்வும் இருப்பதில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவருக்கு தண்டனை கிடைத்த அன்றைய நாளிலிருந்து இன்று வரை அழுது கொண்டுதான் இருக்கின்றார்.

ஹஸ்ரத் கஅப் அவர்கள் கூறுகின்றார்கள்: எனது உறவினர்களில் சிலர் என்னிடம், ஹஸ்ரத் ஹிலால் அவர்களின் மனைவி பெருமானார் (ஸல்) அவர்களிடம் எத்தகைய விஷயத்திற்காக அனுமதி வாங்கினார்களோ அதை உங்களுக்காகவும் வாங்கிக் கொள்ளுங்கள். அதற்கான அனுமதியும் உங்களுக்கு கிடைத்து விடும் என்று கூறினர். அதற்கு நான், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் இது தொடர்பாக ஒருபோதும் அனுமதி பெற மாட்டேன். இந்த விஷயத்தில் பெருமானார் (ஸல) அவர்கள் என்ன பதில் வழங்குவார்கள் என்று எனக்குத் தெரியாது. மேலும் நானோ இளைஞனாக இருக்கின்றேன். ஹஸ்ரத் ஹிலால் அவர்களோ முதியவராக இருக்கின்றார் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அதற்குப் பிறகு பத்து நாட்கள் இவ்வாறே கழித்தேன். எங்களிடம் பேசக்கூடாதென பெருமானார் (ஸல்) அவர்கள் தடைவிதித்த நாளிலிருந்து ஐம்பது நாட்கள் பூர்த்தியாயின. நான் ஐம்பதாம் நாளின் ஃபஜ்ருத் தொழுகையை எங்கள் வீடுகளில் ஒன்றின் மாடியில் நிறைவேற்றி விட்டு அமர்ந்திருந்தேன். பூமி இத்தனை விரிவாய் இருந்தும் என்னைப் பொருத்த வரையில் அது குறுகி, நான் உயிர் வாழ்வதே மிகக் கஷ்டமாயிருந்தது என்ற கூற்றிற்கேற்ப இந்த நிலையிலேயே நான் அமர்ந்திருந்தேன்.

அப்போது ஒருவர் சல்உ மலை மீது ஏறி, இது மதீனாவின் வடக்குப் பகுதியிலுள்ள ஒரு மலையின் பெயராகும். உரத்த குரலில், கஅப் பின் மாலிக்கே! உங்களுக்கு நற்செய்தி என்று கூறினார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதைக் கேட்டு நான் உடனே சஜ்தாவில் விழுந்தேன். எனது துன்பம் நீங்கி விட்டது என்று நான் கருதினேன். பெருமானார் (ஸல்) அவர்கள் ஃபஜ்ர் தொழுத பிறகு இந்த அறிவிப்பைச் செய்தார்கள். அதாவது அல்லாஹ் கருணை காட்டியவாறு உங்களது தவறுகளை மன்னித்து விட்டான். இந்த நற்செய்தியை அன்னார் வழங்கினார்கள். எனது இரண்டு தோழர்களிடமும் நற்செய்தியைக் கூறக்கூடியவர் சென்றார். அதாவது ஹஸ்ரத் ஹிலால் மற்றும் இன்னொரு நபரிடம் சென்றார். அப்போது என்னை நோக்கி ஒருவர் குதிரையில் விரைந்து வந்தார். அஸ்லாம் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு நபர் ஓடி வந்தார். அவர் மலையின் மீது ஏறினார். அந்தக் குரல் அக்குதிரையை விட வேகமாக வந்து சேர்ந்தது. எவர் என்னிடம் நற்செய்தி கூற வந்தாரோ அப்போது என்னிடமிருந்து இரண்டு ஆடைகளை கழற்றி அவருக்கு அணிவித்தேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அந்த இரண்டு

ஆடைகளைத் தவிர வேறெதுவும் அப்போது எனக்குச் சொந்தமானதாக இருக்கவில்லை. அதையும் அவர்கள் வேறு எவரிடமிருந்தோ கேட்டுப் பெற்றவாறு அவருக்கு அணிவித்தார்கள்.

மேலும் கூறுகின்றார்கள்: நான் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் சென்றேன். பெரும் எண்ணிக்கையில் மக்கள் என்னை சந்தித்தனர். தவ்பா ஏற்றுக் கொள்ளப்பட்டதன் காரணமாக எனக்கு வாழ்த்துக்களை கூறினர். மேலும் என்னிடம், அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்டியவாறு தவ்பாவை ஏற்றுக் கொண்டிருக்கின்றான். எனவே உங்களுக்கு வாழ்த்துக்கள் என்று கூறினர்.

ஹஸ்ரத் கஅப் அவர்கள் கூறுகின்றார்கள்: இறுதியில் நான் பள்ளிவாசலுக்கு சென்றேன். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அமர்ந்திருப்பதைக் கண்டேன். மக்களும் அன்னாருக்கு அருகில் அமர்ந்திருந்திருந்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்கள் என்னைப் பார்த்து என்னை நோக்கி ஓடி வந்தார்கள். என்னைத் கட்டித் தழுவினார்கள். எனக்கு வாழ்த்துக்களை கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹாஜிரீன்களில் அவர்களைத்தவிர வேறெவரும் என்னை நோக்கி வருவதற்காக எழுவில்லை. தல்ஹா அவர்களின் இந்த செயலை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

ஹஸ்ரத் கஅப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறியதும் அன்னாரது முகம் சந்தோஷத்தினால் மின்னிக் கொண்டிருந்தது. மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள், உன்னை உன் தாய் பெற்றெடுத்தது முதல் உன்னைக் கடந்து சென்ற நாட்களில் மிகச் சிறந்த நாளான இன்று உமக்கு நற்செய்தி கூறுகின்றேன் என்று கூறினார்கள். அதற்கு நான், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! இந்த நற்செய்தியை தாங்களே தங்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கின்றீர்களா? அல்லது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து தெரிவிக்கின்றீர்களா? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இல்லை. அல்லாஹ்வின் தரப்பிலிருந்துதான் தெரிவிக்கின்றேன் என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஏதாவது சந்தோஷம் ஏற்படும்போது அவர்களது முகம் சந்திரனின் ஒரு துண்டு போல் ஆகி பிரகாசிக்கும். அவர்களது முகத்தின் பிரகாசத்தை வைத்து அவர்களது சந்தோஷத்தை நாங்கள் அறிந்து கொள்வோம்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நான் அமர்ந்து கொண்டபோது, அன்னாரிடம், எனது பாவம் மன்னிக்கப்பட்டதற்காக என் செல்வம் அனைத்தையும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் தர்மமாக அளித்து விடுகிறேன் என்று கூறினேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உங்கள் செல்வத்தில் சிறிதளவை உங்களுக்காக வைத்துக் கொள்ளுங்கள். அதுவே உங்களுக்கு நல்லது என்று கூறினார்கள். எனவே நான் கைபர் போரில் எனக்கு கிடைத்த பங்கை நான் எனக்காக வைத்துக் கொள்கிறேன் என்று கூறினேன்.

நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! நான் உண்மை பேசிய காரணத்தினால்தான் அல்லாஹ் எனக்கு இரட்சிப்பை வழங்கினான். எனவே என் பாவம் மன்னிக்கப்பட்டதனால் நான் உயிரோடு வாழும் வரையில் உண்மையைத் தவிர வேறெதையும் பேச மாட்டேன் என்று கூறினேன்.

எனவே நான் இந்த பெருமானார் (ஸல்) அவர்களிடம் உண்மை சம்பவத்தைக் கூறிய நாளிலிருந்து இன்று வரை பொய் பேசியதில்லை. மேலும் நான் உயிரோடு இருக்கின்ற வரை அல்லாஹ் என்னை பொய் பேசுவதிலிருந்து பாதுகாப்பாக வைப்பான் என்று நான் நம்புகிறேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த வஹீயை அறிவித்தான். துன்ப வேளையில் அவரைப் பின்பற்றிய முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார்கள் மீதும் அருள் செய்தான். அவர்களில் ஒரு பிரிவினருடைய இதயங்கள் கோணலாகி இருந்தது. எனினும் அவன் அவர்களது தவ்பாவை ஏற்றுக் கொண்டான். நிச்சயமாக அவன் அவர்கள் மீது மீண்டும் மீண்டும் கருணை காட்டக்கூடியவன் ஆவான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! இதற்கு பிறகு அல்லாஹ் எனக்கு நேர்வழி காட்டினான். மேலும் தன் தூதர் (ஸல்) அவர்களிடம் என்னை உண்மை பேசச் செய்து உபகாரம் புரிந்தது போன்று வேறெந்த உபகாரத்தையும் நான் மிகப் பெரியதாக ஒருபோதும் கருதவில்லை. நான் அவர்களிடம் பொய் பேசியிருந்தால் பொய் சொன்னவர்கள் அழிந்துபோனது போல நானும் அழிந்து போயிருப்பேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் இறை அறிவிப்பு அதாவது வஹீ அருளியபோது யாருக்கும் சொல்லாத கடுமையான சொற்களை பொய் கூறியவர்களைக் குறித்து அருளினான். அதாவது நீங்கள் அவர்களிடம் திரும்பி வரும்போது உங்கள் முன்னிலையில் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்வார்கள். அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை ஒருபோதும் நேசிக்க மாட்டான்.

ஹஸ்ரத் கஅப் அவர்கள் கூறுகின்றார்கள்: எங்கள் மூவரின் விவகாரம் மட்டும் தள்ளி வைக்கப்பட்டிருந்தது. எந்த மக்கள் பெருமபானார் (ஸல்) அவர்களிடம் சாக்குப் போக்கை கூறினார்களோ, மேலும் அன்னாருக்கு முன்பாக சத்தியம் செய்தார்களோ அவர்களிடம் அன்னார் பைஅத் வாங்கினார்கள். மேலும் அவர்களுக்காக பாவமன்னிப்பு வேண்டினார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களது தீர்ப்பை ஒத்தி வைத்திருந்தார்கள். எதுவரை என்றால் அல்லாஹ் எங்கள் தொடர்பாக தீர்ப்பு வழங்கினான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

அதாவது அவர்கள் கூறுகின்றார்கள்: போருக்குச் செல்லாமல் பின்தங்கி விட்ட மூவர் என்பது இதன் பொருளல. மாறாக, நபி (ஸல்) அவர்கள் தம்மிடம் பொய்யான சாக்குப போக்கு கூறியவர்களின் காரணங்களை ஏற்றுக் கொண்டது போலல்லாமல் எங்கள் விவகாரத்தை உடனே தீர்ப்பளிக்காமல் அல்லாஹ் தள்ளிப்போட்டு வந்தான் என்பதே அதன் கருத்தாகும்.

(ஸஹீஹ் புகாரி கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 4418)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா அவர்கள் அமீர் முஆவிய்யாவின் ஆட்சிக் காலத்தில் வஃபாத்தானார்கள்.

(அல்அஸாபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 8 பக்கம் 428 ஹிலால் பின் உமைய்யா – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தபூக் போர் தொடர்பாக ஒரு சுருக்கமான குறிப்பும் உள்ளது. அதையும் நான் படித்து விடுகின்றேன். இதற்கு முன்பும் நான் கூறியுள்ளேன். மீண்டும் ஒரு முறை சுருக்கமாக எடுத்துக் கூறி விடுகின்றேன்.

தபூக் மதீனாவிலிருந்து ஷாம் நாட்டிற்கு செல்கின்ற வழியில் ஓரிடத்தில் அமைந்துள்ளது. இது கரா பள்ளத்தாக்கிற்கும் ஷாமிற்கும் இடையே உள்ள ஒரு நகரமாகும். இது அஸ்ஹாபுல் அய்கா என்று அழைக்கப்படுகிறது. ஹஸ்ரத் ஷுஹைப் (அலை) அவர்கள் இங்கு தான் தோன்றினார்கள். ஹஸ்ரத் ஷுஹைப் (அலை) அவர்கள் மத்யனைச் சார்ந்தவர் ஆவார்கள். அன்னார் மத்யன் மட்டுமின்றி அஸ்ஹாபுல் அய்காவிற்காகவும் அனுப்பப்பட்டார்கள்.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 17 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மதீனாவிலிருந்து இது ஏறக்குறைய 400 மைல் தொலைவில் உள்ளது. தபூக் போர் என்பதற்கு மேலும் பல பெயர்கள் உள்ளன. இதனை கஸ்வத்துல் உஸ்ரா அல்லது ஜைஷுல் உஸ்ரா என்றும் அழைக்கப்படுகிறது. அதாவது நெருக்கடியான போர். கஸ்வத்துல் ஃபாஸிஹா என்றும் அழைக்கப்படுகிறது. அதாவது இந்தப் போர்

நயவஞ்சகர்களை இழிவுபடுத்தக்கூடியதாகும்.

(ஷரஹுல் அலாமா.... தொகுதி 4 பக்கம் 66... – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

பெருமானார் (ஸல்) அவர்கள் சுலஹ் ஹுதைபிய்யாவிற்குப் பிறகு முதல் தப்லீக் கடிதத்தை ரோமானிய கைஸருக்கு எழுதினார்கள். அப்போது அந்த கடிதத்தை பஸ்ராவின் கிருத்தவ கவர்னராக திகழ்ந்த ஹாரிஸ் பின் அபூ ஷமர் கஸ்ஸானிக்கு அனுப்பி வைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தி அவருக்கு கிடைத்தபோது அவர் பகைமையை வெளிப்படுத்தினார். மேலும் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதாக மிரட்டினார். எனவே அவர் மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்கலாம் என்று நீண்ட காலம் வரை மதீனாவின் மக்கள் எண்ணினர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 802)

மேலும் இந்தப் போருக்கான ஆயத்தமும் இதன் காரணமாகவே அமைந்தது. அதாவது ஷாமைச் சார்ந்த வியாபாரக் குழுவைச் சார்ந்தவர்கள் இவர்கள் எண்ணெய் வியாபாரத்திற்காக மதீனாவிற்கான பயணத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஒரு செய்தி கிடைத்தது. அதாவது, கைஸர் ஒரு மிகப்பெரும் படையுடன் சிரியா நாட்டில் ஒன்று கூடியுள்ளார் என்று செய்தி கிடைத்தது.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அதாவது அரபு நாட்டின் கிறித்தவர்கள் கைஸருக்கு இவ்வாறு எழுதியிருந்தனர். நபித்துவ வாதத்தை செய்துள்ள இவர் அழிந்து விட்டார். முஸ்லிம்களை பஞ்சம் சூழ்ந்து கொண்டது. இதன் விளைவாக இவர்களது விலங்குகள் அழிந்து போயிற்று நவூதுபில்லாஹ். எனவே கைஸர் ஒரு பெரும் படையை பல கோத்திரத்தைச் சார்ந்த போர் வீரர்களைக் கொண்ட ஏறக்குறைய 40000 வீரர்களை ஆயத்தம் செய்து சிரியாவிலுள்ள யல்கா என்ற பகுதியில் ஒன்று கூட்டினான். ஆனால் இந்த செய்தியில் எந்த உண்மையும் இல்லை. ஆனால் இந்த செய்தியே போருக்கான ஆயத்தங்களைச் செய்வதற்கு காரணியாக அமைந்தது.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி கிடைத்தது. அப்போது மக்களிடம் எந்த ஆற்றலும் இருக்கவில்லை. எனினும் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடம் புறப்படுவதற்கான அறிவிப்பைச் செய்தார்கள். மேலும் எந்த இடத்திற்கு பயணம் மேற்கொள்ள வேண்டுமோ அந்த இடத்தைப் பற்றி அன்னார் அறிவித்தார்கள். இந்த விளக்கத்தை ஷரஹ் அல்லாமா ஸர்கானீ அவர்கள் எழுதியுள்ளார்கள்.

(ஷரஹுல் அலாமா.... தொகுதி 4 பக்கம் 67,68 தபூக் போர் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதில் சஹாபாக்களின் தியாக உணர்வும், நயவஞ்சகர்களின் சூழ்ச்சியும் வெளிப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் இந்தப் போருக்காக ஆயத்தமாகுமாறு அறிவிப்புச் செய்த செய்தார்கள். அப்போது சஹாபாக்கள் தம்மிடம் இருந்த பொருட்களை தமது சக்திக்கு அப்பாற்பட்டவாறு தியாகங்களை செய்தார்கள். ஆனால் எவர்கள் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி இருந்தார்களோ அவர்களது உணர்வு மற்றும் துடிப்பு ஆகியவை எந்த அளவுக்கு இருந்தது என்றால், நூற்றுக்கணக்கான மைல் தொலைவை அவர்கள் நடந்து செல்வதற்கு ஆயத்தமாகினர். இந்த திட்டத்தில் பங்கு பெறுவதற்கு தம்மால் இயன்ற வரை தியாகம் செய்வதற்கு ஒவ்வொருவரும் தமது வீட்டை நோக்கி ஓடினர். சிலர் தமது கேடயங்களை கொண்டு வந்தனர். சிலர் தனது அன்பிற்குரிய தலைவருக்காக அதிகம் அதிகமாக கொடுக்க முயற்சி செய்தனர்.

எவ்வாறிருப்பினும் அனைவரும் வீட்டில் இருப்பதை தேடி எடுத்து எப்படியாவது போரில் கலந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினர். மேலும் நடந்து சென்று போரில் கலந்து கொள்வதற்கும் அவர்கள் ஆயத்தமாக இருந்தனர். இன்னும் சொல்வதென்றால், சிலரிடம் காலணிகள் இல்லாமல் இருந்தது. அத்தகைய மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, எங்களுக்கு காலணிகள் கிடைத்தால்போதும். நாங்கள் நடந்து செல்வதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம். எங்களது கால்களில் காலணிகள் இல்லையென்றால் காயங்கள் ஏற்பட்டு விடும். எனவே எங்களால் அந்த இடத்தை அடைய முடியாது என்று கூறினர். அந்த நேரம் எப்படிப்பட்டதாக இருந்ததென்றால், அவர்களுக்கு இதைக் கூட ஏற்பாடு செய்து கொடுக்க முடியாத நிலை இருந்தது. எவ்வாறிருப்பினும் ஒவ்வொருவரும் தமது உயிரை தியாகம் செய்வதற்கு ஆயத்தமாக இருந்தனர்.

மேலும் ஹஸ்ரத் உமர் அவர்களது வீட்டில் அதிகமான செல்வங்கள் இருக்கின்றன. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களை விட இன்று நாம் முந்தி விடலாம் என்று அவர்கள் கருதியவாறு வீட்டிலுள்ள பாதி பொருட்களை பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களது வீட்டில் உள்ளவர்களுக்கு எதை விட்டு விட்டு வந்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு உமர் அவர்கள், பாதி செல்வத்தை கொண்டு வந்துள்ளேன். பாதியை விட்டு விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், தமது வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களையும் கொண்டு வந்து பெருமானார் (ஸல்) அவர்களிடம் கொடுத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களது வீட்டிலுள்ளவர்களுக்காக எதை விட்டு விட்டு வந்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், வீட்டிலுள்ளவர்களுக்காக அல்லாஹ்வையும், அவனது ரஸூலையும் விட்டு விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் மீது பொறாமை கொண்டவாறு, அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்னால் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களை எந்த விஷயத்திலும் முந்திச் செல்ல முடியாது என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி கிதாபுல் முனாஃபிக்.... ஹதீஸ் எண் 3675)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இந்த சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

ஒரு முறை நமது நபி (ஸல்) அவர்கள் பணத்தின் தேவையைப் பற்றி குறிப்பிட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வீட்டிலுள்ள அனைத்தையும் எடுத்துக் கொண்டு அன்னாரிடம் வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், அபூபக்ரே! உங்களது வீட்டிலுள்ளவர்களுக்காக எதை விட்டு விட்டு வந்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், வீட்டிலுள்ளவர்களுக்காக அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் பெயரை விட்டு விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வீட்டிலுள்ள பாதி பொருட்களை கொண்டு வந்திருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், உமரே! வீட்டிலுள்ளவர்களுக்காக எதை விட்டு விட்டு வந்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், பாதி செல்வத்தை என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அபூபக்ர் மற்றும் உமர் அவர்களின் செயல்களில் எந்த வித்தியாசம் இருக்கின்றதோ அதுவே அவர்களுக்கிடையே உள்ள அந்தஸ்தில் இருக்கின்ற வேறுபாடும் ஆகும் என்று கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 95)

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் தபூக் போர் சந்தர்ப்பத்தின்போது பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் தமது முழு செல்வத்தையும் கொண்டு வந்தார்கள். அதன் மொத்த மதிப்பு 4000 திர்ஹம் ஆகும்.

(ஷரஹுல் அலாமா.... தொகுதி 4 பக்கம் 69 தபூக் போர் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 16 January 2020 Issue No. 3

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களும் ஒட்டகங்களையும், குதிரைகளையும், சில ரொக்கங்களையும் தியாகம் செய்தார்கள். அந்த தியாகத்தின் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்கள் மிம்பரில் நின்றவாறு, இந்த செயலுக்குப் பிறகு உஸ்மான் அவர்கள் மீது எந்த கேள்வி கணக்கும் கேட்கப்படாது என்று கூறினார்கள். அதாவது இந்த செயலுக்குப் பிறகு உஸ்மான் அவர்களின் எந்த செயல் தொடர்பாகவும் கேள்வி கேட்டப்பட மாட்டாது.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இன்றைய நாளுக்குக் பிறகு உஸ்மான் அவர்கள் எந்த செயலை செய்தாலும் அது அவருக்கு துன்பத்தை தராது. இதை அன்னார் இரண்டு முறை கூறினார்கள்.

(ஷரஹுல் அலாமா.... தொகுதி 4 பக்கம் 68 தபூக் போர் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ அகீல் ஒரு சஹாபி ஆவார்கள். போரில் கொடுப்பதற்கு அவர்களிடம் எதுவும் இருக்கவில்லை. எனவே அவர்கள், ஒரு நபருரிடம் இரவில் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவது தொடர்பான பணியில் இணைவதாக ஒப்பந்தம் செய்தார். முழு இரவும் கயிற்றை இழுத்தவாறு கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்து வயலை நிரப்புவார். அதற்கு பதிலாக அவருக்கு இரண்டு ஸாஹ் கிடைக்கும். அதாவது ஏறக்குறைய 4,5 கிலோ பேரீத்தம் பழங்கள் கிடைக்கும். அதில் பாதியை தமது மனைவி மக்களுக்கும், பாதியை அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்தவாறு பெருமானார் (ஸல்) அவர்களிடம் அர்ப்பணித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களும் இந்த சந்தர்ப்பத்தில் தமது பாதி செல்வத்தை பெருமானார் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார்கள். அதன் மொத்த மதிப்பீடு 4440 திர்ஹம் ஆகும். ஹஸ்ரத் ஆஸிம் பின் அதீ அவர்கள் 100 வஸ்க் பேரீத்தம் பழங்களை தியாகம் செய்தார்கள். அதாவது ஒரு வஸ்க் 60 சாஹ் ஆகும். ஒரு சாஹ் 2.5 கிலோ ஆகும். அதற்கு நயவஞ்சகர்கள் இதை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக அவர் செய்கின்றார் என்று குற்றம் சாட்டினர். அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை அருளினான்.

இது தொடர்பாக நான் இதனையும் கூறி விடுகின்றேன். அதாவது ஏறக்குறைய இது 14000 கிலோ ஆகும். அதாவது ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள் 14000 கிலோ பேரீத்தம் பழங்களை அர்ப்பணித்தார்கள். எனவேதான் நயவஞ்சகர்கள் இது வெளிப்படுத்துதலாகும் என்று கூறினார்கள்.

இதனையும் கூறி விடுகின்றேன். அதாவது கடந்த குத்பாவில் நான் தவறுதலாக 600 கிலோ பேரீத்தம் பழம் என்று கூறியிருந்தேன். ஆனால் அது 600 அல்ல. 6000 கிலோ ஆகும். எவ்வாறிருப்பினும் நயவஞ்சர்கள், இது வெளிப்படுத்திக் காட்டுவதற்காக செய்யப்பட்டது என்று குற்றச்சாட்டை சுமத்தியபோது அல்லாஹ் சூரா தவ்பாவில் இந்த வசனத்தை அருளினான்.

அதாவது நம்பிக்கை கொண்டவர்களுள் மகிழ்ச்சியுடன் தாராளமாகத் தானம் வழங்குபவர்களைப் பற்றியும், தங்களின் (கடின) உழைப்பால் பெறுவதைத் தவிர (வேறு) எதனையும் வழங்காதவர்கள் பற்றியும் குற்றஞ்குறை கூறுபவர்கள் (நயவஞ்சகளாகிய) இவர்களேயாவர். எனவே அ(வ்வாறு தியாகம் செய்ப)வர்களை (நயவஞ்சகர்களாகிய) இவர்கள் ஏளனம் செய்கின்றனர். அல்லாஹ் அவர்களின் ஏளனத்திற்கு தண்டனை வழங்குவான். மேலும் அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனை உண்டு. (9:79)

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 6 பக்கம் 215 அபூஅகீல், பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது இத்தகைய குற்றச்சாட்டை சுமத்துகின்ற நயவஞ்சகர்களுக்குரியதாகும். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா அவர்கள் தொடர்பாக இந்த விஷயம் வந்துள்ளது. மேலும் இவர்கள் தொடர்பாக மேலும் சில குறிப்புகள் எஞ்சியுள்ளது. அதனை இன்ஷா அல்லாஹ் பிறகு எடுத்துக் கூறுவேன்.

இப்போது ஒரு அறிவிப்பும் உள்ளது. அது வக்ஃபே நவ் துறை சார்பானதாகும். அவர்கள் ஒரு Website ஐ ஆரம்பித்துள்ளனர். அதன் பெயர் waqfenauintl.org ஆகும். இன்று இது துவக்கி வைக்கப்படும். இன்ஷா அல்லாஹ். இந்த Website ல் பெற்றோர்கள் தமக்கு பிறக்க இருக்கின்ற குழந்தைகளை வக்ஃபில் பங்கு பெறச் செய்வதற்காக எழுதிய கடிதங்கள் தொடர்பாக அதற்குரிய பதிலை வக்ஃபே நவ் துறையைச் சார்ந்தவர்களிடமிருந்து நேரடியாக வழிகாட்டலை பெற முடியும். மேலும் வக்ஃபே நவ்வின் தஃலீம் மற்றும் தர்பிய்யத் தொடர்பாக எனது வழிகாட்டல்களையும் பெற்றோர்கள் இதிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

பிறகு Website ல் கலீஃபாக்களின் குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகள் மற்றும் வக்ஃபே நவ்வின் பாடத்திட்டம், ஆண் பிள்ளைகளுக்கான இஸ்மாயீல் மற்றும் பெண் பிள்ளைகளுக்கான மர்யம் என்ற பத்திரிகையின் பிரதிகளையும் இதில் பார்க்கலாம். பிறகு வக்ஃபே நவ்வின் கேரியர் பிளானிங் தொடர்பான வழிகாட்டலையும் பெற முடியும். பிறகு வக்ஃப் புதுப்பிப்பது மற்றும் வக்ஃபே நவ் துறையுடன் தொடர்பை நிலைத்திருக்கச் செய்வது, Update செய்யக்கூடிய வசதிகளும் உள்ளன. பிறகு வாக்கிஃபீனே நவ் குழந்தைகளுக்கு ஜமாஅத்தின் தேவைகள் குறித்த தகவல்களும் அதில் கிடைக்கும். அதாவது அவர்கள் ஜமாஅத்திற்கு சேவை செய்வதற்காக எத்தகைய மேற்படிப்பை படிக்கலாம் என்பதை தெரிந்து கொள்ளலாம். வக்ஃபே நவ் செயலர்கள் மற்றும் அமைப்பு ரீதியிலான வழிகாட்டலை பெறுவதற்கும், அறிக்கைகளும் அதில் உள்ளன. பிறகு வாக்கிஃபீனே நவ்களின் சில கேள்விகளுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் என்னிடம் வகுப்பில் கேட்ட கேள்விகளும் அதன் வீடியோ கிளிப்ஸும் இதில் இடம் பெற்றுள்ளது.

பிறகு வக்ஃபே நவ் தொடர்பான அறிமுகம் மற்றும் வக்ஃபே நவ் துறையுடன் நிரந்தர தொடர்பில் இருப்பதற்கு போதுமான தகவல்களும் உள்ளன. பல்வேறு நாடுகளில் வக்ஃப் நவ்களுடன் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் அறிக்கைகள் மற்றும் புகைப்படங்களும் அதில் கிடைக்கும். எவ்வாறிருப்பினும் இன்று இந்த Website துவங்கப்படும். இன்ஷா அல்லாஹ். வாக்கிஃபீனே நவ் பிள்ளைகளும், வாக்கிஃபீனே நவ் பெற்றோர்களும் இதிலிருந்து கண்டிப்பாக பயன் பெறவும்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad